
விலை சதம் 15

# சுதந்திரன்
SUTANTIRAN

மில்க்வைற்
நீல சோப், பார் சோப்
சீரான சலவைக்கேற்ற சிக்கனமான சோப்
புதிய மேலுறைகளுடன் இலங்கை முழுவதும் விற்பனையாகிறது
மில்க்வைற்

வள்ளுவர் ஆண்டு 1999, சித்திரை உ22 (4-5-68) ஸபர் 5 — புத்தகம் 22 இதழ் 33

# மாவட்ட சபை மசோதா
# நிறைவேருமல் தடுக்க முயற்சி!




"நவீன அர்த்தநாரீசுவரர்கள்"

உத்தேச மாவட்ட சபை மசோதாவை பாராளுமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்ற முடியாமல் அரசாங்கத்துக்கு நெருக்கடிகளை ஏற்படுத்துவதற்கு பல சதித்திட்டங்களை நாட்டிலுள்ள தமிழ் விரோத சக்திகள் ஒன்று சேர்ந்து தீட்டி வருவதாக தெரியவருகிறது.

கூட்டாட்சிக் கட்சிகளான சுதந்திரக் கட்சி, சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, மூன்றும் மீண்டும் சிங்கள மக்களிடையே தோசை வடை கோஷத்தை வேகமாக கிளப்பி வருகின்றன. மாவட்ட சபை மசோதா நிறைவேற்றப்பட்ட அடுத்த நிமிடம் நாடு பிளவுபட்டுவிடும் என அவை பிரசாரம் செய்து வருகின்றன. இவற்றுக்கு உறு துணையாக பதியுதீன் மாமூத்தின் இஸ்லாமிய சோசலிச முன்னணியும் சேர்ந்துள்ளது.

மகா சங்கத்தைச் சேர்ந்த பௌத்த பிக்குகள் சிலரும் மாவட்ட சபைக்கு எதிராகவும் தமிழ் மக்களுக்கு எதிராகவும் துவேஷப பிரசாரத்திலீடுபட்டு வருகிருர்கள். முன்னுள் நீதியரசர் திரு. ஹேமாபசநாயகாவும் எரிகிற நெருப்பில் எண்ணையூற்றி வருகிருர்.

மாவட்ட சபை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் தினத்தில் மற்ருெரு "சனவரி 8" ஐ உருவாக்கும் முயற்சியில் தற்போது எதிர்க்கட்சிகள் ஈடுபட்டுள்ளதாக அறியப்படுகிறது.

மாவட்ட சபை மசோதாவுக்கு எதிராக சிங்கள மக்களை தூண்டும் பணியில் குணசேனு பத்திரிகை நிறுவனத்தை சேர்ந்த 'தவச' 'சவச' 'சன்' போன்ற ஏடுகள் பொய்ச் செய்திகளை வெளியிட்டுவரும் வேளையில் அதே நிறுவனத்திலிருந்து வெளிவரும் தமிழ் தினசரியான 'தினபதியோ' அதிகாரமில்லாத குறித்த மாவட்ட சபை மசோதாவால் பிரயோசனமில்லை என்ற கருத்தை தமிழ் மக்களிடம் புகுத்தவும், தமிழ்

(7-ம் பக்கம் பார்க்க)

# வி. நவரத்தினத்தின் குற்றச்சாட்டுக்களுக்கு
# தமிழரசுப் பொதுச்செயலாளர் பதில்!

"கட்சியின் முழு அதிகாரங்களையும் உடைய பொதுக் காரிய சபையின் முன் தோன்றித் தனது கட்டுப்பாட்டை மீறிய செயலுக்குரிய காரணங்களை எடுத்து விளக்கத் தவறிய திரு. நவரத்தினம் எதிர்பார்த்தது போல பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுவதில் இறங்கி இருக்கிருர்.

எந்த அரசியல் இயக்கத்திலும் கருத்து வேற்றுமை இருப்பது சகஜம். ஆனுல் அவற்றைக் கட்சிக்குள் விவாதித்துத் தீர்த்துக் கொள்வது தான் ஒழுங்கு. விவாதித்து முடிவில் பெரும் பாலோருடைய தீர்ப்பை ஏற்றுக்கொள்வது தான் முறை.

மனச்சான்றின் படி அம் முடிவை ஏற்றுக்கொள்ள முடியாவிட்டால் கட்சியிலிருந்தும் கட்சிசார்பில் தான் பெற்ற பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்தும் இராஜிஞமாச் செய்து மக்கள் தீர்ப்பைப் பெறுவது தான் கண்ணியம். இவற்றில் எதையும் செய்யத் திரு. நவரத்தினம் தவறி விட்டார். முறைப்படி கூட்டப்பட்ட பொதுக்காரியசபை ஏகமனதாக எடுத்த முடிவை ஏற்று நடக்கும் பெருந்தன்மை திரு, நவரத்தினத்திடம் ஏற்படுமென்று எதிர்பார்க்கின்றேன்.

இவ்வாறு தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளர் திரு. அ.அமிர்தலிங்கம் தமிழரசுக்கட்சி பொதுச் சபை மீதும், தம்மீதும் ஊர்காவற்றுறை பா. உ. திரு. வி. நவரத்தினம் சுமத்திய குற்றச்சாட்டுகளுக்கு பதிலளித்து சுதந்திரனுக்கு விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.


திரு. அமிர்தலிங்கம் தமது அறிக்கையில் கூறியிருப்பதாவது-:

"கட்டுப்பாட்டை மீறித் திரு. நவரத்தினம் நடப்பது இது முதல் தடவையல்ல. 1962-ஆம் ஆண்டு மன்னுர் மகாநாட்டில் மலை நாட்டிற் தொழிற் சங்கம் அமைக்க வேண்டுமென்று கட்சி எடுத்த முடிவை எதிர்த்துப் பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுத்தார். மகா நாட்டு முடிவையே தன் போக்கின் படி எதிர்த்தவர் பொதுக் காரியசபையோ பாராளுமன்றக் குழுவோ எடுக்கும் முடிவுகளை மீறி நடப்பது ஆச்சரியமல்ல.

## போனவர் திரும்பி வந்தார்

மன்னுர் மகாநாட்டோடு போனவர் திரு. வி. ஏ. கந்தையாவின் அகால மரணத்தின் பின் திரும்பி வந்தார்.

பழைய சேவையை எண்ணிக் கட்சி அவரை ஏற்றுக் கொண்டது. பாராளுமன்ற உறுப்பினரானுர். இலங்கை —இந்திய ஒப்பந்த அமுல் மசோதா விஷயத்தில் மீண்டும் தான்பிடித்த முயலுக்கு மூன்றுகாலென்று நின்ருர்.



ஓர் நெருக்கடியைத் தவிர்ப்பதற்காகக் கட்சிப் பாராளுமன்றக்குழு வாக்களியாது விட அனுமதி கொடுத்தது. இப்படிக் கட்டுப்பாட்டைத் தளர்த்தியது தவறென்றும் இனி எச்சந்தர்ப்பத்திலும் எவருக்கும் இப்படி அனுமதி வழங்கக் கூடாதென்றும் கட்சிப் பொதுச்சபை தீர்மானித்தது. திரு. நவரத்தினம் இதை நன்கு அறிவார்.

ஆட்களைப் பதிதல் பற்றிய சட்ட மூலத்தை ஆராய்ந்து கட்சிக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு இவ்வாண்டு ஜனவரியில் நியமிக்கப்பட்ட உபகுழுவில் திரு. நவரத்தினமும் ஓர் உறுப்பினர்.

## ஆட்சேபம் எதுவும் தெரிவிக்கவில்லை

ஆனுல் இம்மாதம் 22ந் திகதி திரு. செல்வநாயகம் பாராளுமன்றக் குழுவைக் கூட்டும்வரை இம் மசோதாவில் ஆட்சேபனைக்குரிய அம்சங்கள்

(-7ம் பக்கம் பார்க்க)

# இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கேட்டுப்பாருங்கள்?

திருவாளர் குயுக்தி

சொல் அழகன்,
கொட்டடி.

கே: விவசாயப்படை உருவாக்குவதன் மூலம் உற்பத்தி அதிகரிக்குமா?

ப: விவசாயப் படையில் வாலிபர்களுடன் யுவதிகளையும் சேர்த்துக் கொண்டால் 'உற்பத்தி' அதிகரிக்கும்!

கே: தனிப்பெருந் தலைவரை தற்போது யாழ்ப்பாணத்தில் காணக் கிடைக்கின்றதில்லையே காரணம் என்ன?

ப: வியட்னும் பிரச்சினையில் தலையிட்டு, வட வியட்னுமுக்கும், அமெரிக்காவுக்குமிடையே சமாதானம் செய்து வைக்க இரவு பகலாக முயற்சி செய்கிருராம்! அதற்குவட்டமேசையொன்றுதான் இன்னும் கிடைக்கவில்லையாம்.

ஃ

வே. சிவநாதன்,
பருத்தித்துறை.

கே: தங்கள் வாழ்க்கையின் குறிக்கோள் என்ன?

ப: உங்கள் கேள்விகளுக்கு பதிலளிப்பது!

ஃ

ஆர். பாலகிருஷ்ணன்,
மாத்தளை.

ப: தமிழ் நாட்டில் தி.மு.க. ஆட்சிக்கு வந்த பின் செய்த முதல் நல்லகாரியமென்ன?

ப; அரசாங்கத்துறைகளில் தூய தமிழைப் புகுத்தியது!

ஃ

தாழையூர் நாகராஜன்,
தாளங்குடா.

கே: கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவை மூன்றும் ஒரே நேரத்தில் வெற்றி தருமா?

ப: வெற்றி பெற்றிருக்கின்றனவே தமிழகத்தில்! அறிஞர் அண்ணுவின் உருவத்தில்!

கே: ஒரு பெண் தன் உயிரைவிட்டாலும் சேலையை விட மாட்டாள் என்று என் நண்பன் சொல்கிருன் உங்கள் கருத்தென்ன?

ப: உண்மைதான். ஒரு மானமுள்ள பெண் உயிரிழக்க நேரிட்டாலும் மானத்தைக் காக்கும் சேலையை விடமாட்டாள்.

ஃ

எஸ். மலர்,
எஸ். குமாரி,
ஓமந்தை.

கே: நான் விரும்பும் தொழிலிற்கு இந்தப் போலிச் சமுதாயம் பலத்த எதிர்ப்பு தெரிவிக்கின்றதே. அதிலிருந்து விடுபடுவதற்கு ஒருவழி கூறுவீர்களா?

ப: நீங்கள் விரும்பும் 'தொழில்' தூய்மையானது என்ருல் போலிச்சமுதாயத்தின் எதிர்ப்புக்கு நீங்கள் ஏன் அஞ்சவேண்டும்?

ஃ

த. இ. இந்திரன்,
கல்முனை-2.

கே: கீலக வருடம் பிறந்ததும் நீங்கள் எதைச்சாதித்தீர்கள்?

ப: பிலவங்கவருடம் முழுவதும் இ. போ. ச. பஸ்களில் பிரயாணம் பண்ணிய போதும், கீலக வருடத்தை ண்டு களிப்பதற்கு தப்பிப் பிழைத்திருக்கிறேனே! அது பெரிய சாதனை இல்லையா?

ஃ

பெ. சந்திரசேகரன்
தலவாக்கொல்லை.

கே: தி. மு. க. முன்னேறுவதற்கு என்ன செய்யவேண்டும்?

ப: தமிழகத் தி. மு. க. வைத்தானே கேட்கிறீர்கள்? தமிழகத்தில் முழு அளவில் வளர்ச்சிபெற்று ஆட்சி பீடத்தைப் பிடித்து விட்ட தி. மு. க. இன்னும் முன்னேறவேண்டுமானுல், அகில இந்தியக்கட்சியாக மாறி டெல்லி ஆட்சியையும் கைப்பற்ற வேண்டும்.

ஃ

த. பு. ராசா,
கைதடி.

கே; நாம் அரசாங்கத்தில் உத்தியோகம் பார்க்க வேண்டுமானுல் தமிழா சிங்களமாபடிக்க வேண்டும்?

ப: அரசாங்க உத்தியோகம் பார்க்கும் ஆசை இன்னும் போகவில்லையா? பேசாமல் உங்கள் ஊர் எம். பியின் அறிவுரையைப் பின்பற்றி விவசாயத்திலீடுபடுங்கள்!

ஃ

வாசுகி,
மன்னிங்பட்டினம்.

கே: நீங்கள் கொடுக்கும் பதிலைப் பார்த்தால் உறுதியற்ற, பயந்த மனிதராகத் தெரிகிறதே?

ப: நீங்கள் கேட்கும் கேள்விகளைப் பார்த்தால, மேல் வீடு காலியானவர் போல் தெரிகிறதே!

ஃ

ஆர். கண்ணதாசன்,
நீர்கொழும்பு.

கே: தமிழன் இருக்குமிடமெல்லாம் பஸ் சேவை மோசமாயிருப்பதின் காரணம் என்ன?

ப: பஸ்களைவிட தமிழன் தனது கால்களை நம்புவதனுல்!

கே: பூவுலகில் இன்பமானது எது?

ப: பச்சிளங்குழந்தையின் மழலைச் சிரிப்பு!

ஃ

எஸ். சுந்தர்ராஜ்,
மஸ்கெலியா.

கே: ஆசிய ஜோதி அமரர் நேருவின் கொள்கையை கடைப்பிடித்து வரக்கூடிய தலைவர் வேறுயாராக இருக்கலாம்?

ப; வேறுயார்? அறிஞர் அண்ணுதான்!

ஃ

நல்லூரன்,
பதுளை.

கே: கட்டுக்கடங்காத காளையை என்ன செய்யலாம்?

ப: கன்னியொருத்தியிடம் பிடித்துக் கையளிக்கலாம்!

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194, ஏ பண்டாரநாயக்கா வீதி,
கொழும்பு-12

## வாசகர் கருத்து

# ஆபாச ஏடுகள் முச்சந்தியில் வைத்துக்கொளுத்தப்பட வேண்டும்!

இந்த ஈழத்திருநாட்டிலே பல தமிழ்த் தினசரிகள் எப்படியோ இன்னும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. சில அண்மையில் முளைத்தவை. இவைகளிற் சில மாலைத்தினசரிகள். தமக்கு முதிர்ந்த அறிவின்மை காரணமாகவோ, சுயநலம் காரணமாகவோ தம்மைத்தாமே தலையங்கங்களிற் தீட்டிப் பெருமைப்பட்டுக் கொள்கின்றன. உண்மையான சேவைமனங் கொண்ட பத்திரிகையை மக்கள் புகழ வேண்டும். பாவம் ஒரு சில காலைத்தினசரிகள்! விசேடமாக அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட ஒன்று!! ஏனையோரின் புகழ்ச்சி கிட்டாத போது தம்மைத் தாம் புகழத்தானே வேண்டும்.

எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும். இதைப் போதிக்க வேண்டியவை எமது பத்திரிகைகள். இந்த எண் எழுத்தின் மூலம் நாளைய சந்ததியினரை நற்பிரசைகளாக்க வேண்டிய தினசரிகள், விசேடமாக மாலைத் தினசரிகள் அந்த எண் எழுத்தின் மூலமே ஒவ்வொரு நாட்டினதும் நம்பகமான காவற் செல்வங்களாகிய இளைஞர்களை கொலைகாரர்களாகவும், கொள்ளைக்காரர்களாகவும் தம்மை உருவாக்கித் தம்மைத் தலைநிமிர்ந்து வாழவைக்கின்ற பெண்ணினத்தின் கற்பைச் சூறையாடும் மிருகங்களாகவும் நாகரீகமான முறையில் மாற்றிக் கொண்டிருக்கின்றன.

வேண்டுமா? அல்லது இந்தப்பண வெறிபிடித்த பத்திரிகைகளைச் சந்தியில் நிறுத்தி தூய உள்ளத்துடன் வீராவேசம் கொண்டு பாரதிதாசனின் 'நல்லதோர் உலகம் செய்வோம்' என்ற இலட்சியத்தை நிறைவேற்றத்துடிக்கும் இளைஞர்களுக்கு அவைகளின் உதிரத்தை உறிஞ்சிக் குடிப்பதற்கு ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திஞல் நன்ருக இருக்காதா?

ஒழுக்கத்தோடும், இலட்சியப்போக்கோடும் இருப்பவர்கள் இந்தப் பத்திரிகைகளை வாங்குவதில்லையென்ருலும் ஏனைய சாதாரண மக்களை விசேடமாக இளைஞர்களை இப் பத்திரிகைகள் கெடுத்தே விடுகின்றன என்பது மறுக்க முடியாத உண்மை.

—"யூகி"

கொழும்பு-13.

——

இன்று எம் நாட்டு செய்தித் தாள்களை உற்று நோக்கிஞல் நொடிப்பொழுதில் நம் நாட்டைப் பற்றி கருத்துத் தெரிவிக்கக் கூடிய நிலை இருக்கின்றது. நாளாந்தம் வெளியாகும் கொலை, கொள்ளை, களவு, விபச்சாரம் மோசடி இன்னும் இன்னேரன்னவும் போதாக்குறைக்கு பிரசித்தி பெற்ற மேற்கண்டவற்றை விமர்சனப்படுத்தும் கடந்த காலச் சம்பவங்கள். அப்பப்பா! நினைக்கவே மனம் கூசுகிறது! தத்ரூபமாக வெளியாகும் ஆபாசம் இதயங்களை மாசு படுத்தித்தானு பணம் சம்பாதிக்க வேண்டும்? கணிகைகளின் கவர்ச்சி உடையினைப் பார்த்து நம் இளம் நங்கையருமல்லவா அதனைப் போல் ஆடை அணிய விரும்புகிருர்கள். இது என்ன அநியாயம்? இனியும் இந்நிலை நீடித்திடுமானுல் வருங்காலத்தினில் இந்த இலங்கையில் அறிவு நிறைந்த அகங்களினை காண்பதரிதாகிவிடும்!

எனவே நாமும் நாம் வாழ்ந்திடும் இந்த நாடும் வளம் பெற்றுத் திகழ்ந்திட வேண்டுமானுல் இப்படிப்பட்ட பத்திரிகைகளை கலாசார அமைச்சு உடனே தடை செய்திட வேண்டும் இல்லையேல் நம் நாட்டில் கற்பழிப்புகளும், பயங்கரக் கொள்ளைகளும், சர்வசாதாரணமாகிவிடும்! அதன் பின் மனிதர் மனிதராக வாழ்ந்திட இயலாது!.

—இரா. மோசஸ்,

பலாங்கொடை.

——

மேடைகளிலும் பத்திரிகைகளிலும் சமீபகாலமாக வெளி நாட்டிலிருந்து வரும் 'குப்பை' பத்திரிகைகள் தடை செய்யப்படல் வேண்டும். என்ற குரல் ஒலிக்க தொடங்கியுள்ளது.

வெளிநாட்டு தரமற்ற பத்திரிகைகளையும், தடை செய்ய, அல்லது, கட்டுப்படுத்த வேண்டியதவசியமே.

இன, மொழி, மத, வேறு

# ஈழத்தின் பத்திரிகைத்தரம் இப்படியா குன்ற வேண்டும்?

இந்த மாலைத்தினசரிகள் தாம் மூலை முடுக்குகளில் நடக்கும் தில்லு முல்லுகளை அம்பலத்திற்குக் கொண்டு வருகின்ருேம் என்று உரிமை கீதம் பாடலாம். ஏனெனில் இதைத் தவிர இவைகளுக்கு வேறு சாட்டு ஏதும் கூறுவதற்கு இல்லாததால். அப்படியாயின் கற்பழிப்புச் சம்பவங்களையெல்லாம் இப்படியாகச் சட்டையைத் தூக்கிஞர், இப்படியாகப் பிடித்தார், தொடையை நக்கிஞர், தொடையில் ஏறி இருந்தார்' இரத்தம் ஒழுகியது என்றெல்லாம் வர்ணிப்பது எதற்காக?

சினிமாவில் இப்படியொரு கட்டம் வரின் அதற்கொரு தணிக்கை சபை. அந்தக் கட்டம் வெட்டப்படுகின்றது. 'வயது வந்தவர்களுக்கு மட்டும்' என்று போடப்படுகின்றது. தணிக்கை செய்ய முன்பு நாம் சினிமாவைப் பார்த்தால் கூட பார்க்கும் போதுதான் ஆபாசம். ஆனுல் இந்த எழுத்துக்களோ மனித குணத்தையே மனிதர்களிடமிருந்து நின்று நின்று அறுக்கும் தன்மை வாய்ந்தவை.

பணவெறி பிடித்தவர்களின் இரகசியப் பகற் பணக் கொள்ளையைச் சிரமேற் கொண்டு நடத்தும் இந்த விபச்சார நோட்டீஸ்கள் தடைசெய்யப்பட வேண்டுமா? அன்றேல் இந்த ஈழமணித் திருநாட்டுத் தமிழ் இளைஞர்களின் தனித்தன்மையைப் பறித்துக் கொண்டிருப்பதற்காக சந்தியில் வைத்துக் கொழுத்தப்பட

ஊட்டும் சித்திரங்கள், எதற்காக?

ஒரு காலத்தில் தமது கலாச்சாரத்துக்கு உதவாத பண்பு என ஒதுக்கப்பட்டவை, இன்று கௌரவமாக கைக் கொள்ளப்படுகிறது. காரணம் அறியாமையே!

மக்கள் பண்டு தொட்டு கூறி வந்த பழக்க வழக்கங்களை அறியாமையெனப் புறக்கணித்தல் அறிவீனம்! உட் பொருளை உணர்ந்தால் சீர்திருத்தம் என்ற போர்வையில் தம்மினத்தையே படுகுழியில் தள்ளும், தொட்டிலும் ஆட்டி பிள்ளையைக் கிள்ளும் ஆபாசத்தைத் தண்டித்துக்கொண்டே காம இச்சைகளை யூட்டும் செய்திகளை வெளியிடுமா?

—அர்த்த நாரீசுவரன்,

பதுளை.

——

பத்திரிகைப் பணி ஒரு புனிதமானபணியென்பதனை துண்டுப் பிரசுரக்காரர்கள் உணர்ந்திடல்வேண்டும். ஒரு நாட்டு மக்கள் நல்வாழ்வு பெற்றிடவும் அவர்கள் நல் வழியினில் சென்றிடவும், முதல் முன் நின்று பாடுபட வேண்டியவை அந்நாட்டுப் பத்திரிகைகளே! இன்று இவ்வீழத்தில் வெளியாகும் துண்டுப் பிரசுரங்களால் இன்றய இளம் இதயங்கள் நூற்றுக்கு தொண்ணூறு வீதம் வரையிலும் பாதிக்கப்பட்டு வந்திடுவது குறிப்பிடத்தக்கது. பணத்துக்காக கவர்ச்சிப்படங்களை வெளியிடுபவர்கள் இளம் பாடின்றி எவருக்கும் அஞ்சாது துணிவுடன் உண்மை செய்திகளை வெளியிட்டு நடுநிலை நின்று நற்பணி புரிய வேண்டிய பத்திரிகை உலகம் இன வெறியையும் மத வெறியையும், கிளப்பிவிட்டு அதன் மூலம், பத்திரிகைகளை அதிகம் விற்பனை செய்ய முயற்சி செய்யும் பத்திரிகைகளும், உடல் உறவு நிர்வாணப் படங்களை வெளியிடு பத்திரிகைகளும் நமது பண்பாட்டை, ஒழுக்கத்தை நாசமாக்கவில்லையா?

நாட்டு மக்கள் நாசமாக போகட்டும் அவர்களின் பண்பாடு, ஒழுக்கம், மண்ணேடுமண்ணுக, புதையுண்டு குட்டிசுவராக போகட்டும் நமக்கு பத்திரிகை விற்ருல் போதும், பணம் வந்தால் போதும், என்ற முறையில் நமது நாட்டில் பத்திரிகைகள்வருகின்றன. அப்பத்திரிகைகள், தடைசெய்யப்படல் வேண்டும் அல்லவா?

இந்நாட்டு பத்திரிகைகள், குறிப்பாக. தி. மு. க. எம். ஜி. ஆர் அறிஞர் அண்ணு. நாம் தமிழர், ஆகிய பெயர்களை வைத்துக்கொண்டு. எவ்வளவு பொய் கதைகளை புனைய முடியுமோ அதையெல்லாம் புனைந்து, தமிழ் பேசும் மக்கள் மேல் சிங்கள மக்கள் வெறுப்படைய இனக் கலவரம் ஏற்படுத்தி அதன் மூலம், பணம் சம்பாதிக்க, முயலும் புல்லுருவி பத்திரிகைகளை முதலில் தடை செய்ய வேண்டியது அவசியமாகும்.

—என். கருப்பையா,

நோர்வூட்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வி. நவரத்தினத்தை தமிழரசுக் கட்சியிலிருந்து வெளியேற்றியது சரியா?

**எண்ணம்**

## அடையாள அட்டையும் தமிழ்பேசும் மக்களும்

இந்நாட்டிலுள்ள 18வயதுக்கு மேற்பட்டவர்கள் சகலரையும் பதியவும், அப்படி பதிவு செய்யப்பட்டவர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்கவும் வழிவகைகள் செய்யும் மசோதா ஒன்று சென்ற வாரம் பாராளுமன்றத்தில் பிரதமரால் சமர்ப்பிக்கப்பட்டு அதன் மீது சூடான விவாதமும் நடைபெற்றிருக்கிறது.

மசோதாவைச் சமர்ப்பித்துப் பேசிய பிரதமர், மசோதாவின் நோக்கம், இந்நாட்டில் சட்ட விரோதமாக நுழைந்துள்ளவர்களைக் கண்டு பிடிப்பதும், புதிதாக சட்ட விரோதமாகநுழைபவர்களைத் தடுப்பதுமே என்று தெளிவாகக் கூறியிருக்கிறார்.

சட்ட விரோதக் குடியேற்றம் உடனடியாகத் தடுத்து நிறுத்தப்பட வேண்டுமென்பதில் நாட்டுப்பற்றுள்ள எந்தப் பிரஜைக்கும் அபிப்பிராய பேதம் இருக்க முடியாது. சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களைக் கண்டு பிடிப்பதில் சிங்கள மக்களைப் போலவே இந்நாட்டுத் தமிழ் பேசும் மக்களும் அரசாங்கத்துக்கு பூரண ஒத்துழைப்பை அளித்து வருகிறார்கள்.

ஆட்களைப்பதிவு செய்து, அடையாள அட்டை வழங்வதும், அந்த அடிப்படையில் தான் என்றால், அரசாங்கத்துக்கு அந்த வகையில் தங்கள் ஆதரவைத்தர தமிழ் பேசும் மக்கள் என்றும் தயாராகவேயுள்ளனர். இதன் காரணமாகவே தமிழரசுக்கட்சியும், குறித்த மசோதாவை ஆதரிக்க முடிவு செய்துள்ளது என்று கருதுகிறோம்.

தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் —ஒருவரைத்தவிர— அனைவரும் மசோதாவிற்கு ஆதரவு அளித்துள்ளதால், சிங்களப் பொது மக்களில் சிலருக்கு தமிழ் பேசும் மக்களின் தேசபக்தியில் ஏற்பட்டிருந்த ஐயமும் இத்துடன் மறைந்து விடும் என்று நம்புகிறோம்.

துரதிருஷ்டவசமாக இந்நாட்டில் சட்ட விரோதமாக குடியேறுபவர்களில் பெரும்பாலானோர் தமிழ் பேசுபவர்களாக இருப்பதால் இந்நாட்டில் நிரந்தரமாக வதியும், தமிழ் பேசும் மக்களுக்கு தொல்லைகளும் கஷ்டங்களும்ஏற்படுத்தக்கூடிய சில விதிகள் மசோதாவில் இருப்பதை நாம் மறுப்பதற்கில்லை.

தமிழரசுப் பாராளுமன்றக்குழு மசோதாவிலிருந்து தமிழ் மக்களுக்குப் பாதகமான விதிகளை நீக்கி விடுவதற்கு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது. இந்த முயற்சியில் தமிழரசுக்கட்சிக்கு அனுசரணையாக ஏனைய தமிழ் பா. உக்களும் இருப்பதறிந்து மகிழ்ச்சியடைகிறோம். வேண்டிய திருத்தங்களைக் கொண்டுவருவதற்கும், பிரதமர் பெருந்தன்மையுடன் பாராளுமன்றத்தில் ஓப்புக் கொண்டிருக்கிறார்.

ஆனால் இப்பிரச்சினையில் ஊர்காவற்றுறைப் பிரதிநிதி திரு. வி. நவரத்தினத்தின் போக்கு விசித்திரமாக இருக்கிறது. இம்மசோதா பற்றி அனாவசியமான — கற்பனைப் பயங்களை தமக்குள் ஏற்படுத்திக் கொண்டு தமிழ் பேசும் மக்களையும் அவர் குழப்பி வருகிறார்.

அரசாங்கம் ஆரம்பத்தில் கொண்டு வர உத்தேசித்துள்ள மசோதா இன்று அப்படியே பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்குமாயின், தமிழரசுக்கட்சி அதனை மூர்த்தண்யமாக எதிர்த்திருக்கும்; அரசாங்கத்திலிருந்து வெளியேறவும் துணிந்திருக்கும்.

முன்னைய மசோதாவில் தமிழ் பேசும் மக்களை மட்டுமே பதிவு செய்து அடையாள அட்டைகள் வழங்கவும் நாடற்றவர் என்று கூறப்படும் மலையக தோட்டத் தொழிலாளர்களுக்கும் பதிவுப் பிரஜைகளுக்கும் இலங்கையின் மரபு வழித் தமிழர்களுக்கும் வெவ்வேறு அட்டைகள் வழங்கவும் வழி செய்யக் கூடியதான விதிகள் இருந்தன.

இப்போதைய மசோதாவின்படி இலங்கையிலுள்ள 18வயதிற்கு மேற்பட்ட அனைவரும் சிங்களவருட்பட பதிவுசெய்யப்பட்டு அடையாள அட்டைகளும் வழங்கப்படவிருக்கின்றனர். அத்துடன், சிங்களவர், இலங்கைத்தமிழர் முஸ்லிம்கள், மலைநாட்டுத்தமிழர் என்ற பேதமின்றி யாவருக்கும் ஒரே மாதிரியான அடையாள அட்டைகளே வழங்கவும் மசோதா வகை செய்கிறது. எனவே மசோதாவில் எந்த விதமான பாரபட்சமும் இடம் பெறவில்லை.

திரு. நவரத்தினம் அச்சம் தெரிவிப்பது போல, கண்ட கண்ட இடத்தில் எல்லாம் அடையாள அட்டைகளைக் காட்டும்படி கேட்டு பொதுமக்கள் நிர்ப்பந்திக்கப்பட மசோதாவில் துளியும் இடம் கிடையாது.

மாறாக, குறிக்கப்பட்ட இடத்தில், குறிக்கப்பட்ட நேரத்தில் அடையாள அட்டையைக் கொண்டு வந்து காட்ட வேண்டுமென்று ஒருவரைக்கோருவதற்கு ஆணையாளருக்கு அல்லது அவரால் நியமிக்கப்படுபவருக்கு அதிகாரமிருப்பதாகவே மசோதா தெளிவாக விளக்குகிறது.

அடையாள அட்டை மசோதாவினால் தமிழ் பேசும் மக்களுக்கு தீமை யேற்படுமென்று கூறுவதைவிட சில வழிகளில் நன்மை ஏற்பட வழியுண்டென்று அழுத்தம் திருத்தமாக கூற விரும்புகிறோம்.

இன்று அலைகடலிலே மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் பலர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு கொடுமைப்படுத்தப்படுகிறார்கள். அதே போல மலைநாட்டுத் தமிழர்கள் தோட்டங்களை விட்டு, வெளியேறி மன்னார், வவுனியா, கிளிநொச்சி போன்ற இடங்களுக்குச்சென்றால் அங்கு கள்ளத்தோணிகளெனகைது செய்யப்பட்டு துன்புறுத்தப்படுகிறார்கள். ஆனால் அவர்களிடம், தாம் இலங்கையில் வாழுபவர் என்பதற்கு அடையாளமாக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட, அடையாள அட்டை இருக்குமாயின், அவர்களைச் சந்தேகப்படவோ கைதுசெய்யவோ எவருக்கும் அதிகாரம் கிடையாது.

ஆகவே இன்று சந்தேகப் பிரஜைகளாகக் கைது செய்யபபட்டு துன்புறுத்தப்படும் தமிழ் பேசும் மக்களுக்கு அடையாள அட்டை ஓரளவு பாதுகாப்பளிக்குமென்பதில் ஐயமில்லை. மசோதா பற்றி திரு. நவரத்தினம் எழுப்பும் அச்சம், ஆதாரமற்ற வீண் பிரமையாலெழுந்த ஒன்று என்பதை வலியுறுத்தும் நேரத்தில் மசோதாவில் பின்வரும் திருத்தங்கள் உடனடியாகச் செய்யப்படவேண்டும் என்றும் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

(1) இலங்கையடங்கிலும், ஒரே காலத்தில் ஆட்பதிவும், அடையாள அட்டை வழங்குதலும் நடைபெற வேண்டும் என்பது மசோதாவில் திட்டவட்டமாக குறிப்பிடப்படவேண்டும்.

(2) விண்ணப்பங்களை நிராகரிக்கும் ஏகபோக உரிமையை இதற்காக நியமிக்கப்படும் ஆணையாளரின் தனிப் பொறுப்பில் விடக்கூடாது.

(3) விண்ணப்பம் தவறுதலாக நிரப்பி அனுப்பப்பட்டால், அது குப்பைக்கூடைக்குப் போய் விடக்கூடாது. அதிலுள்ள தவறுகளைக் குறிப்பிட்டு வேறு விண்ணப்பம் அனுப்பும்படி விண்ணப்பம் அனுப்பியவருக்கே திருப்பி அனுப்பப்படவேண்டும்.

(4) ஒரு விண்ணப்பம் நீதியற்ற முறையில் நிராகரிக்கப்பட்டிருந்தால் அதை எதிர்த்து நீதிமன்றத்தில் வாதாட, பாதிக்கப்பட்டவருக்கு உரிமையிருக்க வேண்டும்.

(5) பதிவு செய்வதற்கும், அடையாள அட்டை வழங்குவதற்கும் கோரப்பட வேண்டிய தகவல்கள் எவையென்பதை முடிவு செய்யும் அதிகாரம் ஆணையாளரிடம் இருக்கக் கூடாது. அதை அரசாங்கப் பாராளுமன்றக் குழுவே கூடி வகுக்கவேண்டும்.

(6) அடையாள அட்டை ஆட்கள் பதிவு சம்பந்தமாக கோரப்பட வேண்டிய விபரங்களைத் தவிர அனாவசியமான, தேவையற்ற தகவல்களை மனுச் செய்பவரிடமிருந்து ஆணையாளர் கோரமுடியாது.

(7) மசோதாவின் 27வது சரத்து, இந்நாட்டுப் பிரஜைகளையே சந்தேக நபராக்கும் தன்மை கொண்டதால், அச்சரத்து முற்றாக அகற்றப்பட வேண்டும்.

(8) வெளி நாடுகளில் பணியாற்றிவிட்டு தாயகம் திரும்புபவர்கள், இங்கு வந்தவுடன், தங்களைப் பதிவு செய்ய வசதி செய்து தரப்பட வேண்டும்.

ஊர்காவற்றுறை பா. உ. திரு. வி. நவரத்தினம், தமிழரசுக் கட்சியிலிருந்து வெளியேற்றப் பட்டுள்ளார். கட்சியினால் கிடைத்த பாராளுமன்ற உறுப்பினர் பதவியைவிட்டு நீங்கும்படியும், தமிழரசுப் பொதுச் சபையால் கோரப் பட்டுள்ளார்.

அடையாள அட்டை, ஆட்கள் பதவி மசோதாவை எதிர்த்துப் பாராளுமன்றத்தில் உரையாற்றியதன் மூலம் கட்சிக் கட்டுப்பாட்டை மீறி நடந்துகொண்டதற்காக, அவர் மீது கட்சிப் பொதுச் சபை இந்நடவடிக்கையை எடுத்துள்ளது.

திரு. நவரத்தினம், தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகத் தலைவர்களில் ஒருவர். கட்சி நடத்திய போராட்டங்களின் போதும்; கிளர்ச்சிகளின் போதும், முன்னின்றுழைத்தவர். இருமுறை கட்சியின் பொதுச் செயலாளர் பதவியை அலங்கரித்தவர்.

**சுதந்திரன் அரசியல் விமர்சகர்**

அப்படிப்பட்ட ஒருவர் மீது ஒழுங்கு நடவடிக்கையெடுக்கும் போது கட்சியின் பொதுக் குழு உறுப்பினர்களும், திரு. நவரத்தினத்துடன் சேர்ந்து பணியாற்றிய அவரது சகாக்களும், தலைவர் திரு. செல்வநாயகமும் எவ்வளவு தூரம் மன வேதனைப் பட்டிருப்பார்கள் என்பதை சொல்லிக்காட்ட வேண்டியதில்லை.

எனினும், தனிப்பட்ட மனிதரைவிட கட்சி தான் முக்கியம், கட்சியின் கட்டுப்பாடுதான் முக்கியம் என்பதை தெளிவாக உணர்ந்துகொண்ட பொதுச்சபையினர், பாச உணர்வுகளை ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு கட்டுப்பாட்டுடன் நடந்து கொண்டுள்ளனர்.

திரு. நவரத்தினம் அடையாள அட்டை மசோதாவை எதிர்த்துப் பேசியது பற்றி நாம் இங்கு விமர்சிக்கவில்லை. அடையாள அட்டை ஆட்பதிவு மசோதாவால், திரு. நவரத்தினம் குறிப்பிட்டது போல தமிழ்பேசும் மக்களுக்கு பாதகமா அல்லவா என்பது தனியே ஆராயப்பட வேண்டிய விஷயம். ஆனால் திரு. நவரத்தினம் நடந்து கொண்ட விதம் அரசியலில் பண்பாடுள்ளதாக காணப்படவில்லையென்பதை வருத்தத்துடன் குறிப்பிட விரும்புகிறோம்.

திரு. நவரத்தினம் தமது கருத்தை சனப்பிரதிநிதிகள் சபைக்குள்கூறுவதற்குமுன், தமிழரசுப் பாராளுமன்றக் குழுவில் கூறியிருககலாம்; அரசாங்கப் பாராளுமன்றக் குழுவில் கூறியிருககலாம். தமது கருத்துஏற்றுக்கொள்ளப்படாவிட்டால், அரசாங்கத்திலிருந்து வெளியேறிய பின்னர் எதிர்த்துப் பேசியிருக்கலாம். அப்படியின்றி அரசாங்கக் கட்சியில் இருந்து கொண்டே திடுதிப்பென்று அரசாங்கத்தை எதிர்த்துப்பேசியதன் மூலம் கட்சிக் கட்டுப்பாட்டை உடைத்தெறிந்ததுடன், தந்தை செல்வா மேல் அரசாங்கத்தரப்பினர் கொண்டிருந்த மதிப்புக்கும் சிறு களங்கம் ஏற்படுத்திவிட்டாரென்றே கூற வேண்டும்.

திரு. நவரத்தினம், அடையாள அட்டை மசோதாவை தமிழரசுக் கட்சி எதிர்க்கவேண்டும் என்று கருதியிருந்தாரானால், இப்பிரச்சினையை தமிழரசுப் பொதுக் குழு அல்லது செயற்குழுக் கூட்டமொன்றில் ஏலவே கிளப்பி சாங்கோபாங்கமாக விவாதித்து ஒரு முடிவு எடுக்க முயன்றிருக்கலாம். ஏனெனில் அடையாள அட்டை மசோதா திடுதிப்பென்று கொண்டு வரப்பட்டதல்ல.

இப்படிச் செய்ய முயலாது, தமிழரசுக்கட்சிஉறுப்பினராக அரசாங்கத்தின் பக்கத்தில் இருந்துகொண்டே மசோதாவை எதிர்த்து வாக்களிக்கப் போவதாக அறிவித்தது, கட்சிக் கட்டுப்பாட்டை மீறியதென்பதுடன் அரசியல் பண்பாடு அற்றதுமாகும்.

இதற்கு முன்பும் திரு. நவரத்தினம் கட்சியின் முடிவை எதிர்த்து இரு முறை பேசியிருக்கிறார். 1962-ல் மலையகத்தில் தமிழரசுக் கட்சி தொழிற் சங்கம் அமைக்க முடிவு செய்த போதும், கட்சிக் கட்டுப்பாட்டை மீறி நடந்திருக்கிறார்.

இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் மசோதாவிலும் தமிழரசுக் கட்சியின் கட்டுப்

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மக்களின் உரிமைகளை பிரதமருக்கு விற்றேமா? துணிவிருந்தால் சிங்களமக்களிடம் அதை கூறுங்கள்!

**அடையாள அட்டை ஆட்பதிவு மசோதா மீது வட்டுக்கோட்டைப் பிரதிநிதியும், தமிழரசுக் கட்சி பொதுச் செயலாளருமான திரு. அ. அமிர்தலிங்கம், பாராளுமன்றத்தில் ஏப்ரல் 24ந் திகதி அரியதோர் உரை நிகழ்த்தினர். அந்த உரையின் ஓர் பகுதி இங்கு இடம் பெற்றுள்ளது.**

"நான் இவ் விவாதத்தில் பங்குபற்றுவதற்கு எண்ணியிருக்கவில்லை. ஆனல் இந்த மன்றத்தில், ஊர்காவற்றுறைப் பிரதிநிதி, அகலவத்தைப் பிரதிநிதி ஆகிய இருவரின் பேச்சுக்களைக் கேட்ட பின்னர், நான் சார்ந்துள்ள கட்சியின் கருத்துக்களையும், எனது கட்சித் தலைவரும் ஊர்காவற்றுறை பா. உ. தவிர்ந்த ஏனைய உறுப்பினர்களும், இம்மசோதாவை ஆதரிக்க முடிவு செய்த காரணங்களையும் இம்மன்றத்துக்கு எடுத்து விளக்க வேண்டிய அவசியம் எனக்கு ஏற்பட்டுள்ளது.

அகலவத்தை உறுப்பினரின் வாதத்திறமைக்குநான் எப்பொழுதுமே மதிப்பளிப்பவன். சட்டத்துறையில் அவரது நுண்ணறிவுகளையும் ஆங்கிலப் புலமையையும் நான் எப்பொழுதுமே ரசிப்பவன். ஆனல், அவர் கூட்டாட்சிக் கட்சிகளுடன இணைந்த பின்னர், சிங்களத்தில் பேசத் தொடங்கியிருக்கிருர். அப்படிப் பட்டவர் தான் எங்களைப் பார்த்து தமிழில் பேசவில்லையென்று குறை கூறுகிருர்.

வாரம் செய்ய ஒவ்வொரு காரணமும் உண்டு. ஏனெனில் அவரது கருத்துக்களையே இன்று அகலவத்தை உறுப்பினர் ஏற்றுக் கொண்டு விட்டார்.

பீலிக்ஸ்: பலே! பலே!

அமிர்: நாமெலல்லாம் இளைஞர்களாக இருந்த நேரத்திலேஅகலவத்தை உறுப்பினர் புரட்சி பற்றிப் பேசுகின்ற—இரத்தத்தை உறைய வைக்கக் கூடிய பேச்சுக்களைக் கேட்பதுண்டு. அவ்வளவு ஒரு பெரிய போராட்ட வீரர், உலகப் புரட்சி

சாலித்தனமாக அதை அவர் ஆங்கிலத்தில் மட்டுமே கூறினர்—சிங்களத்தில் கூறவில்லை, நான் எதிர்க் கட்சி உறுப்பினர்களுக்கு சவால் விடுகிறேன்—

கொல்வின்: நான் சிங்களத்திலும் அதைச் சொல்லத் தயார். சிங்களத்திலும் நான் அதைச் சொல்ல வேண்டுமென நீர் விரும்புகிறீரா?

அமிர்: அதைச் சிங்களப் பகுதிகளில் போய்க்கூறுங்கள். கள் பேச்சை அவர்கள் நேரடியாக சரியாக புரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகவும் நாங்கள் இச்சபையில் சில சமயங்களில் ஆங்கிலத்தில் பேசுகிறேம். இதன் அர்த்தம் எம்மால் தமிழில் பேச முடியாதென்பதல்ல.

### ஒரு சவால்!

நான் எதிர்க்கட்சிக்கு சவால் விடுக்கிறேன் — சிங்கள மக்களிடம் சென்று தமிழரசுக்கட்சி தமிழ் மக்களை பிரதமருக்கு விற்று விட்டதாக உங்களால் பிரசாரம் செய்ய முடியுமா? அப்படிச் செய்ய துணிவீர்களா? செய்யமாட்டீர்கள். இந்த அரசாங்கத்துக்கு எதிராக சிங்களமக்கள் மத்தியில் நீங்கள் எழுப்பும் ஒரே கோஷம், கடந்த 9 வருடங்களாக சிங்கள மக்களுக்கு தாங்கள் பெற்றுத் தந்த உரிமைகளை தமிழரசுக்கட்சிக்கும் தமிழர்களுக்கும் பிரதமர் விற்று விட்டார் என்பது தானே! அடுத்த தேர்தலில் பிரசாரம் செய்வதற்கு இதைத் தானே ஆயுதமாக வைத்திருக்கிறீர்கள்?

### புதிய கஷ்டமல்ல

நேற்று இச்சபையில் பேசிய ஊர்காவற்றுறைப் பிரதிநிதி திரு. வி. நவரத்தினம் இச்சட்டத்தைப் பற்றியும் இச்சட்டத்தினல் ஏற்படக் கூடிய பாரதூரமான விளைவுகளைப்பற்றியும் அதிக பயத்தைத் தெரிவித்தார். அவர் தெரிவித்தவை அத்தனையும் இன்றைக்கு இந்நாட்டிலே நடைமுறையிலிருக்கின்ற சட்டங்களின் கீழ் தமிழ் பேசும் மக்கள் அனுபவித்து வருகின்ற கஷ்டங்களே தவிர புதிதாக இச்சட்டத்தினல் ஏற்படக் கூடிய கஷ்டமல்லவென்பதைத் தான் நான் அவருக்கும் அவரது கருத்துக்களைக் கொண்டுள்ளவர்களுக்கும் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

இன்று இந்நாட்டில் நடைமுறையிலிருக்கின்ற இலங்கைப் பிரசா உரிமைச் சட்டம், குடியேற்ற வெளியேற்றச் சட்டம் அவற்றின் கீழ் கொண்டு வரப்பட்ட திருத்தங்கள் கடந்த அரசாங்கங்களினல் கொண்டு வரப்பட்ட திருத்தங்கள் ஆகியவற்றின் கீழ் எந்தத் தமிழ் பேசும் மகனும் இந்நாட்டிலே கள்ளத்தோணி மூலம் வந்தவனென்று கைது செய்யப்பட்டு எந்த நேரத்திலும் சிறையில் அடைக்கப்படலாம். அப்படி அடைக்கப்பட்டால் அவன் தான் கள்ளத் தோணியால் வரவில்லை என்பதை அத்தாட்சிப்படுத்தி 1949-ம் ஆண்டுக்கு முன்பு தொடக்கமே தான் இலங்கையில் சட்ட பூர்வமாக வாழ்ந்து வருவதை அத்தாட்சிப்படுத்தி வெளியில்வரவேண்டிய நிர்ப்பந்தமான நிலையிலிருக்கின்ருன்.

ஆகையினல் இச்சட்டத்தினல்தான் அந்த நிர்ப்பந்தம் ஏற்படப் போகிறது என்று கூறுவது தவருன கருத்தாகுமென்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

# எதிர்க்கட்சிக்கு அமிர்தலிங்கம் சவால்!

கொல்வின்: அது சரியல்ல!

அமிர்: நான் அகலவத்தை உறுப்பினருக்கு இடமளிக்கப் போவதில்லை!

கொல்வின்: நான் கூட்டாட்சி அமைப்புக்கு பின்னர் தான் சிங்களத்தில் மட்டும் பேசுவதாகக் கூறுவது சரியல்ல!

அமிர்: நான் அதற்கு வருகிறேன். நமக்கெல்லாம் தெரியும் — இப்பிரச்சினையில் தற்போது கூட்டாட்சிக் கட்சி உறுப்பினர்களிடையே பெரும் போராட்டமேநடைபெற்றுவருவது அகலவத்தை உறுப்பினர் இப்போது பொடி புத்தாவையும், ஆர். ஜி. சேனநாயகாவையும் பின் பற்றும் நிலைக்கு வந்து விட்டார்.

### கோட்டை விட்டார்

நேற்றும் இன்றும் இச்சபையில் அகலவத்தைஉறுப்பினரின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தபோது 1947, 1948-ம் ஆண்டுகளில் அவர் ஆற்றிய பேச்சுக்கள் எனது ஞாபகத்துக்கு வந்தன. அப்போது சட்ட மாணவனுக இருந்த நான் இந்திய போல்ஷ்விக் - லெனினிஸ்ட் கட்சி சார்பில் இச்சபையில் அவர் நிகழ்த்திய உரைகளைக் கேட்டிருக்கிறேன்.

அப்போது, அவரும் அவரது கட்சியும் தங்குதடையின்றிக் கட்டுப்பாடு ஏதுமின்றி இந்நாட்டுக்குள் யாவரும் வர அனுமதிக்கப்பட வேண்டும் என்ற கொள்கையை ஆதரித்துப்பேசினர். ஆனல் இன்று அகலவத்தை உறுப்பினர், தனது கொள்கைகளை மாற்றிக் கொண்டு புதிய சித்தாந்தத்தை ஏற்றுக் கொண்டு குடிவரவினைக் கட்டுப்படுத்தச் சட்டம் வேண்டுமென்று கூறுகிருர். கட்டுப் பாடின்றி யாவரும் வரலாம் என்ற கொள்கையை கோட்டை விட்டு விட்டார்.

பீலிக்ஸ்: பலே! பலே!

அமிர்: ஆம், தொம்பே உறுப்பினர் மகிழ்ச்சியாரயின் தீவிர ஆதரவாளர், இன்று சேலைத் தலைப்பைப் பிடித்துக் கொண்டு நிற்பது பரிதாபமாக இருக்கிறது.

### புதிய தத்துவம்

நேற்று அவர் இச் சபையிலே பேசும்போது ஓர் புதிய தத்துவத்தை கூறினர். பிரதமருடன் செய்து கொண்ட ஓர் இரகசிய ஒப்பந்தமூலம். தமிழரசுக்கட்சி தமிழ்மக்களை விற்று விட்டது என்று அவர் கூறினர். இந்நாட்டில்அரசியல்ஞாபக சக்தி குறைவாக இருக்கலாம். ஆனல், அகலவத்தை உறுப்பினரும் அவரது சகாக்களும் கடந்த 3 ஆண்டுகளாக சிங்கள மக்களிடம் என்ன கூறி வருகின்ருர்கள் என்பதை யாரும் மறந்திருக்க முடியாது.

தேசிய அரசாங்கம் ஏற்பட்ட நாள்முதலாக எதிர்க் கட்சி உறுப்பினர்கள் சிங்களப் பிரதேசங்களுக்கு சென்று, 'தோசை' 'மசால வடை' பிரசாரம் செய்து வருகின்றனர் 'டட்லிகே படே மசாலவடை' என்றும் கூப்பாடு போட்டனர்.

கொல்வின்: நான் சொல்லியிருக்கிறேன் - உம்மைப் போலவடக்கில் ஒன்றும் ஏனைய பகுதியில் இன்னென்றுமாக இரட்டை நாக்கால் நான் பேசுவதில்லை!

அமிர்: எங்களுக்குத் தெரியும் யாருக்கு இரட்டை நாக்கு என்பது.

கொல்வின்: நாங்கள் பார்ப்போம்!

அமிர்: நாடு முழுவதும் அறியும் யாருக்கு இரட்டை நாக்கென்பது.

கொல்வின்: ஏன் நீர் இச் சபையில் தமிழில் பேசுவதில்லை?

அமிர்: நான் பேசுவேன். உமக்குள்ள சிங்கள அறிவைவிட எனக்கு தமிழ் அதிகம் தெரியும்.

கொல்வின்: நான் அப்படியே நம்புகிறேன்.

அமிர்: நான் இச்சபையில் தமிழிலும் பேசுபவன் என்பதும்,எனக்கு நல்ல தமிழ் தெரியும் என்பதும் இந்

1966ம் ஆண்டு சனவரி மாதம் 8ம் நாள் இச்சபையிலே தமிழ் மொழி சட்ட விதிகள் சமர்ப்பிக்கப்பட்ட போது, அதை எதிர்த்து சிங்கள மொழிச்சட்டத்துக்கு மரண சாசனம் எழுதப்பட்டு விட்டதாக கூறி சிங்கள மக்களுக்கு வெறியுணர்வையூட்டி, ஊர்வலங்கள் நடத்தியதும், பௌத்த பிக்குகளை தூண்டி விட்டதும் எதிர்க்கட்சியினர்தான் என்பதை நாட்டு மக்கள் அதற்குள் மறந்து விடுவார்களா? அவர்கள்தான் இச் சபையில் வந்து கூறுகிருர்கள் நாங்கள் தமிழ் மக்களை விற்றுவிட்டதாக.

### மாணிக்கவாசகர் கருத்து

விற்பனையில் இரண்டு வகை இருக்க முடியாது, ஒருவர் வாங்க வேண்டும். ஒருவர் விற்கவேண்டும்.இரு பகுதியினருமே விற்க முடியாது. எனக்கு இந்த இடத்தில்மாணிக்கவாசகர்பாடிய திருவாசகத்தின் ஓடி ஞாபகத்திற்கு வருகிறது.

# தமிழ் மக்களை சந்தேகப் பிரஜைகளாக்குவது புதிய மசோதாவல்ல; பழைய சட்டங்களே

எனக்கு சிங்கள மொழிதெரியாதிருக்கலாம். ஆனல் எதிர்க்கட்சியினர் எழுப்பிய இக்கோஷத்தின் பொருள் என்னவென்பது விளங்கும். அவர்கள் நாடு முழுவதும் சென்று பிரதமர் சிங்கள மக்களை எமது தலைவராகிய திரு. செல்வநாயகத்திற்கு விற்றுவிட்டதாக பிரசாரம் செய்து வருகின்றனர்.

இப்படி ஒவ்வொரு இடைத் தேர்தல்களின் போதும் — தென்னிலங்கையின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் கூறி விட்டு, நேற்று இச்சபையில் அகலவத்தை உறுப்பினர் தமிழரசுக்கட்சி தமிழ் மக்களை பிரதமருக்கு விற்று விட்டதாக சொல்லியிருக்கிருர். புத்திநாட்டிலுள்ள தமிழ் பேசும் ஒவ்வொரு பிரஜைக்கும் தெரியும்!

கொல்வின்: நான் அப்படியே நம்புகிறேன்.

பீலிக்ஸ்: நாகநாதன்!

அமிர்: நாகநாதன் மட்டுமல்ல, இந்நாட்டிலுள்ள எந்தத் தமிழ்ப் புலவனுக்கும் ஈடாக நான் தமிழில் பேசுவேன்!

கொல்வின்: நான் சொல்வது நீர் இங்கு தமிழில் பேசுவதில்லையென்பதைத் தான்!

அமிர்: நான் பேசவேண்டிய நேரத்தில் பேசுவேன்.இச் சபையிலுள்ள தமிழ் தெரியாத உறுப்பினர்களுக்கு மரியாதைக்காகவும், எங்

'தந்ததுன் தன்னை,
கொண்டதென் தன்னை
சங்கரா ஆர் கொலோ
சதுரர்?'

என்று அவர் கடவுளைக்கேட்கின்ருர்.நான் என்னை உனக்குத்தந்து அதற்குப்பதிலாக உன்னை நான் எடுத்துக் கொண்டேன். இதில் யார் திறமைசாலி?' என்று இறைவனிடம் கூறுகிருர். அத்தகைய ஒரு ஒற்றுமையை— இருபெரும் தேசிய இனங்களும் சமவுரிமையுடன் வாழும் நிலையை - எனது தலைவரும், பிரதமரும் ஏற்படுத்தி விட்டனரென்ருல் அது இந்த அரசாங்கத்தின் ஓர் அதிசயிக்கத்தக்க சாதனையல்லவா?

### இன்னல் நீங்க வேண்டும்

இத்தகைய இன்னல்களை நீக்கப்பட வேண்டும். அதை ஒட்டியே 1949-ம் ஆண்டு தொடக்கம் காங்கேசன் துறைப் பிரதிநிதி அவர்களும் அவருடையகட்சியினராகிய நாங்களும் இந்த இன்னல்கள் நீக்கப்பட வேண்டுமென்று கிளர்ச்சி செய்து வருகின்றேம். அவற்றிலுள்ள அநீதிகளைகளை எடுத்துக் காட்டிக் கொண்டு தான் வருகின்றேம்.

### குறைபாடுகள்

இந்த நாட்டிலே தமிழ் பேசும் மக்கள் அத்தனை பேரையும் சந்தேகப் பிரசைகளாக்கிய சட்டங்களை அக்கிரமமானசட்டங்கள்என்று தான் நாம் கடந்த 20ஆண்டுகளாகக் கூறிக் கொண்டு வருகிறேம். அதைக் கூறுவது வேறு; இந்தச் சட்டம் அதைச் செய்வதாக எடுத்துக் கூறுவது வேறு.

இந்தச் சட்டத்திலே சில குறைபாடுகள் இருக்கின்றன. அதை அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த அங்கத்த

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கர்களின் இதயங்களை அண்ணா வெற்றி கொண்டார்!

தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணாவின் அமெரிக்க விஜயம் வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது. தமது கருத்தாழம் மிக்கதும் இயல்பாகவே நகைச் சுவை ததும்புவதுமான பேச்சுக்களால் தமிழக மக்களைக் கவர்ந்தது போலவே அமெரிக்க மாணவர்களையும், பத்திரிகை நிருபர்களையும், ஏனைய அறிஞர்களையும், கவர்ந்து அவர்களின் இதயங்களை வெற்றி கொண்டு வருகிறார் அறிஞர் அண்ணா.

தமிழ் மொழியின் பெருமைகளையும், தமிழ் நூல்களின் சிறப்புக்களையும் எடுத்துக் கூறுவதோடு, யேல் பல்கலைக் கழக மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் திருக்குறள் விளக்க வகுப்புக்களை நடத்தி தமிழ் மறையின் கீர்த்தியையும், தமிழர்கள் 2000 ஆண்டுகளுக்கு முன் பெற்றிருந்த அறிவுத் திறனையும் அண்ணா உணர்த்தி வருகிறார்.

தமிழக, இந்திய, உலக அரசியல் பிரச்சினைகளுக்கெல்லாம் பட்பட்டென்று தாமதமின்றிப் பதில் கொடுத்து, தம்மைத் திகைப்பிலாழ்த்தும் அறிஞர் அண்ணாவை அமெரிக்க பத்திரிகை நிருபர்கள் காலஞ்சென்ற ஜனாதிபதி கென்னடி, மகாத்மா காந்தி போன்ற பெருந் தலைவர்களுடன் ஒப்பிட்டு தங்கள் பத்திரிகைகளில் எழுதியுள்ளனர்.

## கென்னடிக்கு இணையானவர் அண்ணா அமெரிக்க நிருபர் பாராட்டு!

தமிழக முதல் அமைச்சர் அறிஞர் அண்ணா வருகை குறித்து அமெரிக்காவிலுள்ள நியூஹேவனிலுள்ள பெரிய பத்திரிகைகள் எல்லாம் சிறப்பாகச் செய்திகள் வெளியிட்டன.

காலையில் வெளியாகும் 'நியூஹேவன் ஜர்னல் கூரியர்' பத்திரிகை முதல் பக்கத்தில் நான்கு பத்தியில் யேல் பல்கலைக்கழகத்தில் அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியை வெளியிட்டது. முகல் பக்கத்தில் அவரது புகைப் படத்தையும் பிரசுரித்தது.

'புதிய சப்' விருந்தாளி—'தமது நாட்டின் அமைதிப் பணி குறித்து இந்தியத் தலைவர்' என்ற பெரிய தலைப்புடன் பேட்டியைப் பிரசுரித்தது.

'அமைதித் தூதர்' என்ற முறையில் அல்லாது, இந்தியா அண்மை வருங் காலத்தில் உலக விவகாரங்களில் பெரும் பணி எதுவும் ஆற்ற முடியாது என்று அவர் கூறியதை அது மேற்கோள் காட்டியிருந்தது.

வியட்நாம் குறித்து அண்ணாவின் கருத்துக்கள் பற்றி அந்த ஏடு தெரிவித்த கருத்து வருமாறு;

'எங்கு பேச்சு நடத்துவதென்பது பற்றிய தகராறு இரு தரப்பிலும் மனமில்லாததற்கு அறிகுறியல்ல என்று அவர் கருதுகிறார். ஏனெனில் இருதரப்பினருக்கும் மனமில்லையென்றால், 'உலகுக்கு உய்வு இல்லை: நான் இவ்வாறு நினைக்கவில்லை' என்று அவர் கூறினார்.

### இந்தியாவும் உலகும்

மாலையில் வெளியாகும் 'நியூஹேவன் ரிஜிஸ்ட்டர்' பத்திரிகை நிருபர்க்ள் சந்திப்புப் பற்றி மூன்று பத்திச் செய்தி வெளியிட்டு முதல் அமைச்சரின் படத்தையும் பிரசுரித்திருந்தது.

இந்த இதழின் செய்தியாளர் ராபர்ட் கில்பாட்ரிக் என்பவர் அதை எழுதியிருந்தார். 'இந்தியாவின் பிரச்சினைகள் உலகுக்கு ஒருதடை' என்று அவர் தலைப்புப் போட்டிருந்தார்.

### பல்கலைக் கழகத்தில்...

'சப் ஃபெல் லோஷிப்' பெற்ற தலைவர் என்றமுறையில் யேல் பல்கலைக் கழகத்தில் அறிஞர் அண்ணா தமது அலுவல்களில் தொடர்ந்து ஈடுபட்டார்.

டிமோத்தி டுவைட் கல்லூரி முதல்வர் தாமஸ் கோடார்டு பர்கின் இல்லத்தில் மாணவர்கள் குழு ஒன்றைச் சந்தித்து உரையாடினார். கல்லூரி முதல்வரது விருந்தாளியாகவே தமிழக முதல்வர் சென்ற வாரம் இங்கு தங்குகினார். இந்தக் கூட்டத்துக்கு நிருபர்கள் அனுமதிக்கப் படவில்லை. இது போலத் தான் அவர் நடத்திய மற்றக் கல்வித்துறைச் சந்திப்புக்களுக்கும். இது தொன்று தொட்டுக் கடைப்பிடிக்கப் பட்டு வரும் ஒரு கொள்கை என்றும், 'சப்' விருந்தினராக வரும் தலைவர்களும் யேல் மாணவர்களும் குறுக்கீடுகள் இன்றித் தாராளமாக மனம் விட்டுப் பேசிக் கருத்துக்கள் பரிமாறிக் கொள்ள இந்த ஏற்பாடு வகை செய்கிறது என்றும் ஃபெல்லோஷிப்' அதிகாரிகள் தெரிவித்தனர்.

பிற்பகல் அரசியல்—பொருளியல் மேல் படிப்பு மாணவர்களுடன் முதல் அமைச்சர் நடத்திய சந்திப்புக்கும் நிருபர்கள் அனுமதிக்கப்படவில்லை.

### மாணவர்கள் மகிழ்ச்சி

தமிழகமுதலமைச்சர் அறிஞர் சி. என். அண்ணாதுரை யேல் நிருபர்கள்கூட்டத்தில் எல்லாக் கேள்விகளுக்கும் பொறுப்புடன் பதிலளித்து வெளிப்படையாகக் கருத்துக்கள் தெரிவித்தது குறித்துப்பல்கலைக்கழகப் பத்திரிகை துறை மாணவர்களும் மற்ற நிருபர்களும் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். பல்கலைக்கழகத்தின் செய்தி நிலையத்தில் இந்த நிருபர்கள் கூட்டம் நடைபெற்றது. ஒரு மணிநேரத்துக்கு மேல் நீடித்தது.

## அண்ணாவின் நகைச்சுவையுள் மூழ்கினர் 'யேல்' மாணவர்கள்

அண்ணாவின் நகைச்சுவையும் இளைஞர்களிடையே அவர் தாராளமாகப் பழகியதும் மனம் விட்டுப் பேசுவதற்கு தங்குதடையில்லாத சூழ்நிலை அளித்தன.

பலமுறை இளைஞர்கள் வாய்விட்டுச் சிரித்து மகிழுமாறு செய்தார் அண்ணா. மாணவர்களின் செயல் தங்களுக்குப் பிடித்திருந்தால் அரசியல்வாதிகள் அவர்களை தட்டிக் கொடுக்கின்றனர் என்றும், பிடிக்கா விட்டால் பேச்சு மூச்சு இல்லாமல் நழுவிவிடுவார்கள் என்றும் முதல் அமைச்சர் குறிப்பிட்டபோது, அனைவரும் விழுந்து விழுந்து சிரித்தனர்.

யேல் பல்கலைக்கழக அறிவிப்புப் பலகைகளில் எல்லாம் முதல்வர் அண்ணா வருகை சிறப்பிடம் பெற்றிருந்தது. பல சுவரொட்டிகளும் புகைப்படங்களும் எங்கும் காட்சியளித்தன. அவரது நிகழ்ச்சி நிரல்கள் விரிவாக இடம் பெற்றன.

கென்னடியுடனும்மகாத்மா காந்தியுடனும் அண்ணாவை நிருபர்கள் ஒப்பிட்டபோது 'என்னை மிகவும் பெரிய மனிதர்களுடன் ஒப்பிட்டுப்பேசுகிறீர்கள்' என்று அண்ணா குறிப்பிட்டார்.

---

# புலோலி மக்களின் குறைதீர பருத்தித்துறை பா. உ. நடவடிக்கை யெடுப்பாரா?

## மக்கள் குரல்

எமது வடமராட்சியிலே இரு தொகுதிகள் இருக்கின்றன. ஒன்று பருத்தித்துறை தொகுதி, மற்றையது உடுப்பிட்டித் தொகுதி. ஆனல் புலோலியில் வாழ்கின்ற மக்கள் இரு தலைக் கொள்ளி வாயில் அகப்பட்ட எறும்பு போலத் துடி துடித்துக் கொண்டிருக்கிறார்கள். காரணம் வருமாறு!

புலோலி கிழக்குக் கிராமத்திலே பருத்தித்துறை பட்டினம் இருக்கிறது. இதே நேரத்திலே புலோலி கிழக்கு மட்டுமே பருத்தித்துறைத் தொகுதியைச் சேர்ந்ததாகவும் புலோலி தெற்கும் புலோலி மேற்கும்உடுப்பிட்டித் தொகுதியோடுசேர்ந்ததாகவும் இருக்கிறது. இதனலே எமது புலோலி தெற்கு வாசிகளும், புலோலி மேற்கு வாசிகளும் உடுப்பிட்டித் தொகுதியிலே ஒரு புறம் ஒதுக்கப் பட்டவர்களாக சோக முகத்துடன் காட்சியளிக்கிறார்கள்.

உடுப்பிட்டித் தொகுதியிலே தேர்தல் நடந்தேறிய பின் ஏறக்குறைய ஐந்து, ஆறு மாதங்களாக உடுப்பிட்டிப் பிரதிநிதி 'புலோலியில்' அதாவது மந்திகைச் சந்தியிலே ஒரு காரியாலயம் அமைத்து அங்கே புலோலி வாழ் மக்களுக்கு காட்சியளிப்பதாக இருந்தார்—பின்பு சில மாதங்கள் கடந்ததும் அந்தக் காரியாலயம் இன்று ஒரு மோட்டோர் சைக்கிள் கராச்சாக, காட்சியளிக்கிறது.

அங்கு காட்சியளித்த உடுப்பிட்டிப் பிரதிநிதி இன்று புலோலி மக்களுக்கு எங்கு இருந்து காட்சி கொடுக்கிறார்? இதன் மர்மம் என்ன? புலோலி வாழ் மக்களே! சற்றே சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் யாபேரும் குந்தியானவள் கன்னனை பெற்று பேழையிலே வைத்து ஆற்றிலே தள்ளிவிட்டது போல தத்தளித்துக் கொண்டு இருக்கிறீர்கள்.

இன்னமும் புலோலி மக்கள் தாங்கள் புறக்கணிக்கப் படுவதைப் பார்த்து கொண்டு சகிக்க முடியுமா? ஆகவே தான் புலோலி வாழ் மக்கள் யாபேரும் ஒரு தொகுதியின் கீழ் இருக்க வேண்டும்—அப்படி இருந்தால்தான் புலோலி வாழ் மக்களுக்கு ஓர் ஒளி மய மான எதிர் காலம் உண்டாகும்.

ஆகவேதான் புலோலிக்கிராமத்திலே பருத்தித்துறை நகரம் இருக்கின்றபடியால் எங்கள் யாபேரையும் பருத்தித்துறைத் தொகுதிக்கு மாற்றுவதற்கும், எங்களுக்கு சேவை புரிவதற்குமாகஎமது அரசியல் தலைவர்களும், பருத்தித்துறைப் பாராளுமன்ற உறுப்பினருமாகிய உயர் திரு.—க. துரைரத்தினம் அவர்களும் இந்த ஒரு உதவியையாவது புலோலியில் வாழ்கின்ற மக்களுக்கு செய்ய வேண்டும் என்று பணிவன்புடன் வேண்டுகிறேன்.

க. மு. க. இராமநாதன்

தென்புலோலியூர்.

---

## கொழும்பு - திருமலை பஸ்ஸில் எங்கே தமிழ்

கொழும்பில் இருந்து திருகோணமலைக்கும் திருகோணமலையில் இருந்து கொழும்புக்கும் இடையில் சேவைக்கு விடப்பட்டிருக்கும் இ. போ. ச. பஸ்சில் அந்த பஸ்கள் எந்தெந்த ஊர்களுக்கூடாக செல்லுகின்றன என்பதை விளக்கும் விளம்பரம் பஸ்களின் மேல் மூலையின் ஒரு பகுதியில் தனிச் சிங்களத்தில் மாத்திரம் பொறிக்கப்பட்டுள்ளது. பஸ்ஸின் மறுபக்க மேல் மூலையில் இடம் இலவசமாக இருந்தும் ஏன் தமிழிலும் அப் பெயர்பதிப்புக்கள் பொறிக்கப்படவில்லை என தமிழ் பேசும் மக்கள் மிகவும் அதிருப்தி கொள்கின்றனர்.

அதுவும் இத்தேசிய அரசாங்கத்தின் ஆட்சியில் தமிழ் நாட்டுக்கு சேவையில் இடப்பட்டிருக்கும் பஸ்களிலே தமிழ் புறக்கணிக்கப்படுவது தமிழ் மக்களுக்கு மிகவும் கவலை கொடுக்கும் ஓர் செயலாகும். தமிழ் சட்ட விதிகள் நடைமுறையில் இருந்தும் அவை உரிய இடங்களில் பாவனை செய்யத் தவறவிடப்படுவதால் மேற்கண்ட விஷயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுத்து பெயர் பதிப்புக்களை தமிழிலும் எழுதும்படி திருகோணமலை கொழும்பு வாழ் தமிழ் மக்கள் சார்பில் வேண்டுகிறேன்.

—சி. இராஜஜோதி, கொழும்பு-14.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்தப் பிசாசு

அத்தியாயம் 15.

## கீதாவின் மூளை குழம்பியது!

### கே. எஸ். ஆனந்தன்

டாக்டரின் கண்களிலிருந்து சிந்தும் நீர்த்துளிகளைப் பார்த்து 'இந்த மனிதனுக்கும் அழத் தெரியுமா?' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள் கீதா.

டாக்டரின் அழகான விழிகளிலிருந்து வழிந்தோடிய நீரைத் துடைத்து விட வேண்டும் போலிருந்தது. அவள் நினைத்ததைச் செயல்படுத்து முன்பு டாக்டரே கண்ணீரைத் துடைத்துக் கொண்டு தொடர்ந்து கூற முற்பட்டார்.

'என் மனைவி மீது நான் வைத்த மதிப்பும், நம்பிக்கையும் என்னைப் புத்தி பேதலிக்கச் செய்து விட்டது. என்னை ஏமாற்றும் என் மனைவியைப் பழிக்குப் பழிவாங்க வேண்டும் என்ற வெறி என்னுள்ளத்தில் மேலோங்கி நின்றது. மானமுள்ள எவனுக்கும் தன் மனைவி மாற்றான் ஒருவனுடன் ...... அதுவுந் தன் படுக்கையறையில் உல்லாசக் களியாட்டம் நடத்துவதைப் பொறுத்துக் கொள்ளும் சக்தியிருக்காது. அந்த இடத்திலேயே இருவரையும் கண்ட துண்டமாக வெட்டிப்போட வேண்டும்.

ஆனால் நான் அப்படிச் செய்யவில்லை. உடனேயே வந்த சுவடு தெரியாமல் வெளியேறி விட்டேன்.

அன்று பகல் பூராவும்வீட்டுக்கு வரவில்லை. கார் என் மனம் போன போக்கில் திசை திரும்பிக்கொண்டிருந்தது. காரின் பெட்ரோல் தீர்ந்தபோதுதான் எனக்கும் மனதில் எங்கோ நிற்கிறோம் என்ற நினைவு எழுந்தது. இரவு வீட்டிற்கு வந்தேன். எப்போதும் போல இன் முகத்துடனேயே வரவேற்று உபசரித்தாள் மல்லிகா.

'எங்கே இவ்வளவு நேரம் போயிருந்தீர்கள்?நான் இவ்வளவு நேரமும் தவியாய் தவித்துப் போனேன்' என்று அவள் கூறிய முழுப்பொய்யை எப்படி நான் செவிமடுத்தேன் என்பது ஞாபகம் இன்றி சாப்பாடு வேண்டாம் என்று கூறி படுக்கையில் படுத்தேன். மனம் நிம்மதிப்படவில்லை. திட்டம் ஒன்று என்னுள்ளத்தில் உருவாகியது. நான் மேனாடு சென்று படித்தது வீணாகவில்லை. என்படிப்பும் தந்திரமும் ஒன்றுசேர்ந்து ஒரு திட்டம் உருவாகியது. கட்டிய கணவனிருக்க மாற்றான் ஒருவனுடன் பட்டப்பகலில் கணவனுக்குத் துரோகமிழைப்பவள் தன் கணவனைக் கொலை செய்யத்தயங்கவும் மாட்டாள் தானே? அப்படிப்பட்டவளுடன் கூடி வாழ்வது எப்படி? உடனேயே அதற்கோர் பரிசோதனைத் திட்டம் உருவாகியது,' என்று கூறி விட்டுச் சிறிது நேரம் மௌனமாய் நின்றார் டாக்டர்;

'மேலே சொல்லத் துன்பமென்றால் நிறுத்தி விடுங்கள் என்றாள் கீதா!

'இல்லைக் கீதா: சொல்லியே முடிக்க வேண்டும். இல்லையென்றால் என்னிதயம் வெடித்து விடும் போலிருக்கு. ஆகவேதான் இன்று இதற்கு முடிவு காண வேண்டும்' என்று கூறிவிட்டுக் கதையைத் தொடர்ந்தார்.

'என்னருகே கட்டிலில் படுத்திருந்தாள் மல்லிகா. அவள் அழகில் என்மனம் லயித்திருந்தது போய் அருவருப்பே மேலோங்கி நின்றது. என் முடிவைச் செயலாக்க வேண்டும் என்பதால் மனதைத் திடப்படுத்திக்கொண்டு அவளை அணைத்தேன். அவளும்'ஏன் நீங்கள் ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்' என்றாள். அப்பொழுது என் மூளை சுறுசுறுப்பாக இயங்கியது. 'மல்லிகா உன்னை விட்டுப் பிரிந்து விடுவேனோ என்று பயமாக இருக்கிறது.' என்றேன்' 'அப்படிச் சொல்லாதீர்கள். என்று என்மீதுபூரணமாய்ச் சாய்ந்து கொண்டாள். என் உணர்ச்சிகள் பழிவாங்கும் ஆவேசத்தில் துடித்துக் கொண்டிருந்த போது, அவள் இன்பம் காணத் துடித்தாள். நான் சமாளித்துக்கொண்டே 'மல்லிகா! எனக்குப் புகழ்வருவதை நீ விரும்புகிறாயா'? என்றேன். 'எந்தப் பெண்தான் தன் கணவனுக்குப் புகழ் கிடைப்பதை விரும்பமாட்டாள்' என்றாள்.

'அப்படியானால் என்னைப் பிரிந்து ஒரு நாள் இருக்க வேண்டும். என்னுயிர் போய்விடும். உடல் உன்னிடம் இருக்கும் அதற்கு மீண்டும் உயிர் கொடுப்பது உன் பொறுப்பு நீ விரும்பினால் என்னைச் சாகடிக்கலாம்' என்றேன்.

'அப்படிச்செய்வேனா? நீங்களின்றி நானில்லை. எனக்கு உங்கள் நினைவின்றி வேறு என்ன இருக்கு? அத்தான்ங்கள் சொல்வதைக் கேட்டால் எனக்குப்பயமாக இருக்கு' என்றாள்.

அவள் நடிப்பில் கை தேர்ந்தவளாயிருந்தாள். இல்லையெனில் இவ்வளவு சாமர்த்தியமாய் நடித்திருக்க முடியாது. 'மல்லிகா! இந்தப்பரிசோதனையில் என்னதான் திறமையிருந்தாலும் நீதான் முடிவை நிர்ணயிக்க வேண்டியவள். பரிசோதனை நடக்கும் பொழுது இங்கே உன்னையும் என்னையுந்தவிர யாரும் இருக்கக் கூடாது. உன்னுள்ளம் ஒவ்வொரு வினாடியும் இதே நினைவாக இருக்க வேண்டும்.நான் குறிப்பிடும் நேரத்தில் ஒரு நிமிடம் பிந்தினாலும் என்னை உயிருடன் பார்க்க முடியாது. ஆகவே இதில் நீ பூரண வெற்றியடைவாயோ என்று எனக்குச் சந்தேகமாக இருக்கிறது' என்றேன்.

'அப்படிச் சொல்லாதீர்கள். வெற்றி எனக்கே. என்னவென்று விடயத்தைக் கூறுங்கள்'. என்று என் கன்னத்தில் முத்தமிட்டாள்.

அவள் செயல் எனக்கு அருவருப்பை மூட்டினாலும் பொறுத்துக் கொண்டேன். 'இன்றிலிருந்து மூன்றாம் நாள் நான் இறக்க வேண்டும். ஆமாம் நான் கட்டாயம் இறந்தேயாக வேண்டும். என்றேன். அவள் எதுவும் பேசவில்லை. 'பின்பு' என்று மட்டும் கேட்டாள்' என்று நிறுத்திய டாக்டர் நெற்றியில் அரும்பிய வியர்வைத் துளியைத் துடைத்து விட்டுக் கொண்டார்.

குழப்பம் நிறைந்த மனத்துடன் டாக்டர் என்ன கூறப்போகிறாரோ என்று எதிர் பார்த்திருந்தாள் கீதா.

'பின்பு' என்று மல்லிகா கேட்டதைக்கூறிய டாக்டர் மீண்டும் மௌனமாயிருந்தார். அவர் கூறப் போவது பெரும் அதிசயமாய்த்தானிருக்கும் என ஊகித்துக் கொண்ட கீதா அவர் முகத்தைக் கூர்ந்து கவனித்தாள்.

'அவள் அப்படிக் கேட்டதும் எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. மனதைத் திடப்படுத்திக் கொண்டே கூறினேன். மல்லிகா நாளை மறுநாள் சரியாக ஒன்பது மணிக்கு நான் இறந்து விடுவேன். அதற்கு முன் சில ஆயத்தங்கள் செய்து வைப்பேன். நான் இறந்ததும் அடிக்கடி செய்ய வேண்டிய விடயம் பற்றி என் குரல் பேசும்' என்று டாக்டர் கூறியதைக் கேட்ட பொழுது கீதாவுக்குப் பெரும் குழப்பமாகத் தோன்றிற்று. அவள் மூளையே குழம்பி விடும் போலிருந்தது.


# நுரையும் குமிழும் நீங்கி விடும்



ஆனால் நீண்ட நேரம் நிலைத்து நின்று ஈறுகளையும் பற்களையும் பாதுகாப்பது போர்ஹான்ஸ் பற்பசையின் விசேட மருந்துகளே.

நுரைக்கும் குமிழுக்கும் மேலாக உங்களுக்கு தேவைப்படுவது உறுதிமிக்க ஆரோக்கிய ஈறுகளும் உரமான வெண்ணிறப் பற்களுமே ஈறுகளை ஆரோக்கியமாகவும் பற்களை வெண்ணிறமாகவும் விளங்கச் செய்ய உதவுவது போர்ஹான்ஸ் தரும் தனிப்பட்ட பராமரிப்பே.

உறுதியான ஆரோக்கிய ஈறுகளுக்கும் உரமான வெண்ணிறப் பற்களுக்கும் போர்ஹான்ஸ் பற்பசை. போர்ஹான்ஸ் புகழ் மிக்க பல் வைத்தியர் ஒருவரின் தனித் தயாரிப்பு முறையில் தயாரானது.




வரையறுக்கப்பட்ட மஹாராஜா நிறுவகம்

1033



வளரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்த இடத்திலும் தமிழனை கள்ளத்தோணி யென்று கைதுசெய்வதற்கு அமுலிலுள்ள சட்டங்களே காரணம்!

## அமிர் பேச்சு...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் என்ற முறையிலே நேற்றைய தினம் அரசாங்கக் கட்சிக் கூட்டத்திலே எங்கள் கட்சியைச் சார்ந்த பல அங்கத்தவர்கள், யாழ்ப்பாணப் பிரதிநிதி, இச்சபையிலே உள்ள முஸ்லிம் அங்கத்தவர்கள் பலரும் எடுத்துக்கூறினார்கள். நியமன அங்கத்தவர் தொண்டமான் அவர்களும் எடுத்துக் கூறினார்கள்.

இந்நாட்டிலே சட்டபூர்வமாக வாழுகின்ற மக்களுக்கு ஏற்படக்கூடிய பல இன்னல்களை நீக்குவதற்கு சில திருத்தங்கள் செய்யப்படவேண்டுமென்று நாங்கள் வற்புறுத்தினோம். உதாரணமாக அகலவத்தைப் பிரதிநிதி அவர்களும் 27 வது விதியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள், அந்த விதி நீக்கப்பட வேண்டுமென்று நாங்களும் வற்புறுத்துகிறோம்.

### பிரதமர் ஏற்றுக்கொண்டார்

நேற்று நடந்த அரசாங்கக் கட்சிக் கூட்டத்திலும் நாங்கள் இதை வற்புறுத்தினோம்.

அதேபோல, இந்த 7 ஆவது விதியில் சிலமாற்றங்கள் செய்யப்பட வேண்டுமென்றும் 22 ஆவதுவிதியில் சில மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமென்றும் நாம் எல்லோரும் ஏகோபித்து வற்புறுத்தினோம்.

அதன் பலனாக, எமது கோரிக்கை நியாயமானது எனக் கண்ட பிரதம அமைச்சர் அவர்கள் அம் மசோதாவினால் எவருக்கும் கஷ்டம் ஏற்படாத வகையில் அதற்குரிய திருத்தங்களைச் செய்வதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

ஊர்காவற்துறைப் பிரதிநிதி இந்தச் சட்டம் முதலில் யாழ்ப்பாணத்திலே மாத்திரம் அமுலாக்கப்படுமென்ற பயத்தைத் தெரிவித்தார். இந்தச் சபையிலே நான் பேசிக் கொண்டிருக்கும்போதே பிரதமர் அவர்கள் அதற்குரிய திருத்தங்கள் கொண்டுவரப்படுமென்று தெரிவித்தார்கள். இப்பொழுதே மசோதா அப்படியான நோக்கத்தோடுதான் கொண்டுவரப்பட்டது; அது தெளிவாக இல்லாவிட்டாலும் அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு, அதாவது நாடு முழுவதும் பதிவு ஒரே நேரத்தில் ஒழுங்கு நடைபெறக் கூடியதாக. திருத்தம் கொண்டுவரப்படுமென்று அவர்கள் குறிப்பிட்டார்கள்.

இப் பிரச்சினைகள் தீர்க்க முடியாத பிரச்சினைகள் அல்ல. நாம் அவற்றைத் தீர்த்துக்கொள்ளலாம். எமது மக்களுக்கு எத்தனையோ கஷ்டங்கள் இருக்கின்றன.

### நிதிச் சட்டம்

1963-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட நிதிச் சட்டத்தின் கீழ். தமது காசைக் கொடுத்து வாங்கிய காணி பற்றிய உறுதியைப் பதிவு செய்ய முடியாது தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் கஷ்டப்படுகிறார்கள். அதற்கெல்லாம் விமோசனம் தேட வேண்டும். அவற்றைத் தேட நாம் முயற்சிகள் செய்யவேண்டும்.

அதை விட்டு இந்த மசோதாவிலே அந்தப் பழியை

## ஆட்பதிவு மசோதாவால் ஆபத்தில்லை!

## அநீதியான விதிகளை நீக்க வழி காண்போம்!!

யெல்லாம் சுமத்தி இந்த மசோதாவினாலே அவ் விளைவுகள் எல்லாம் வருமென்று கூறுவது பொருத்தமற்ற கூற்றுஎன்பதைத்தான்நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

ஊர்காவற்றுறைப் பிரதிநிதி அரசாங்கக் கட்சிக் கூட்டத்திலே வந்து தமக்கிருக்கின்ற பயங்களைக் கூறியிருக்கலாம். அதற்கான பரிகாரத்தை தேடியிருக்கலாம்.

அதைவிட்டு, இங்கு வந்து தாம் சார்ந்த கட்சிக்கு, தம்மை இந்தச் சபைக்குத் தெரிவு செய்து அனுப்பிய கட்சிக்கு மாறாக அவர் நடக்க முற்படுவது வேதனை தருவதாகும்.

இந்த மசோதாவினால் இன்றிருக்கும் நிலைமையிலும் பார்க்க எந்த வகையிலும் பாதகமான, கஷ்டமான நிலைமை ஏற்பட முடியாது என்று நான் எடுத்துக் கூறினேன். அதற்கு மாறாக இந்த அடையாள அட்டை கொடுக்கப்படும் காரணத்தால் பல மக்கள் அநாவசியமாகத் துன்புறுத்துவதிலிருந்து காப்பாற்றப்பட வசதிஏற்படும் என்று எனக்குத் தோன்றுகிறது. பதிவு செய்வதில் நியாய ஈனங்கள் ஏற்பட்டால் கஷ்டங்கள் ஏற்படலாம். அதிலே ஏற்பட இருக்கின்ற நியாய ஈனங்களைத் தடுப்பதற்கேற்ற திருத்தங்களைக் கொண்டுவர வேண்டுமென்று நாம் கேட்டிருக்கிறோம்.

ஆனால் பதிவு செய்யப்பட்டுவிட்டால் அடையாள அட்டை வைத்திருப்பவர் துன்பம் இல்லாமல் இலங்கையில் எந்தப் பகுதியிலேயும் போய்வரக் கூடியதாக இருக்கும். அந்த வகையில் இந்த மசோதாவை நாங்கள் ஆதரிக்கின்றோம்.

## நவரத்தினத்துக்கு அமிர்தலிங்கம் பதில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்னவென்று திரு. நவரத்தினம் எவருக்கும்அறிவிக்கவில்லை.

22ந் திகதி பாராளுமன்றக் குழுவில் தனது ஆட்சேபனைகளைத்தெரிவித்தார். அவை ஆராயப்பட்டன. அந்த நேரத்தில் திரு. நவரத்தினத்தின் கருத்தைத் திரு. செல்வநாயகம் ஏற்றுக் கொண்டார் என்று சொல்லுவது உண்மையல்ல.

### திரித்து கூறுகிறார்

எமக்கு ஆட்சேபனையிருந்தால் எந்த எந்தப் பகுதியை நாம் ஆட்சேபிக்கிறோம் என்று முன் கூட்டியே பிரதமருக்குத் தெரியப்படுத்தித் திருத்தும் படி கேட்டிருக்க வேண்டும் என்றும் அப்படிச் செய்யாது திடீரென்று எதிர்பது முறையல்ல என்றும் திரு. செல்வநாயகம் சொன்னதை திரு. நவரத்தினம் திரித்துக் கூற முற்படுகிறார்.

விவாதத்தின் இறுதியில் என்ன திருத்தம் கொண்டு வந்தால் இச் சட்டத்தை ஆதரிக்கலாம் என்ற கேள்விக்கு—

27வது ஷரத்தை நீக்க வேண்டுமென்று திரு. நவரத்தினம் பதிலளித்தார்.

23-ம் திகதி காலை அரசாங்கக்கட்சிப் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் எமது ஆட்சேபனைகளைத் தெரிவிப்பதென்றும் அக் கூட்டத்தின் பின் 1-30 மணிக்கு எமது கட்சிப் பாராளுமன்றக்குழுக் கூடி என்ன செய்வதென்று முடிவெடுப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

23-ம்திகதி அரசாங்கக் கட்சிக் கூட்டத்தில் பல திருத்தங்களைச் செய்வதற்கு பிரதமர் ஒப்புக்கொண்டார்.

அவற்றில் 27வது ஷரத்தும் ஒன்று.

பிற்பகல் ஒன்றரை மணிக்கு எமது கட்சிக் குழு கூடிய போது இத் திருத்தங்கள் செய்யப்பட்டால் இச் சட்டத்தினால் எமது மக்களுக்கு ஆபத்து இல்லையென்றும் எனவே சட்டத்தை ஆதரிப்பதென்றும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

அரசாங்கக் கட்சிக் கூட்டத்திலோ எமது பாராளுமன்றக் குழுக் கூட்டத்திலோ திரு. நவரத்தினம் கலந்து கொள்ளவில்லை.

எமது கட்சிப் பாராளுமன்றக் குழுவின் ஏகோபித்த முடிவு திரு. இராசமாணிக்கம் அவர்களால் திரு. நவரத்தினத்திற்கு அறிவிக்கப்பட்டபோது அதற்கு அமைந்து நடக்கமுடியாது என்று கூறினார்.

### சந்தித்து வேண்டினோம்

இதைத்தொடர்ந்து திரு. செல்வநாயகமும் நானும் அவரோடு பேசிக் கட்சிக் கட்டுப்பாட்டைச் சீர்குலைக்க வேண்டாமென்று வேண்டினோம். பலனில்லை. திரு. நவரத்தினம் தனது தனிக் கருத்தைப் பாராளுமன்றத்தில் எடுத்துக் கூறினார்.

அச் செய்கையேதான் ஒரு கட்சி அங்கத்தவர் என்று சொல்வதற்கு அருகதையற்றவராக அவரை ஆக்கிவிட்டது.

கட்சிக்குள் எக்கருத்தைச் சொன்னாலும் வெளியில் கட்சிக் கருத்தைச் சொல்பவர்தான் கட்சி அங்கத்தவர்.

திரு. நவரத்தினத்தின் செய்கையால் எதிர்க் கட்சியினர் எம்மைத் தாக்கி, எள்ளிநகையாட வழி தேடி வைத்தார். இப்படிச் செய்யும் அங்கத்தவரை எக்கட்சியாவது தொடர்ந்தும் வைத்துக்கொள்ள முடியுமா?

அடுத்தநாள் மதிய உணவு நேரத்தில் நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்றுதிரு. நவரத்தினத்தை நான் கேட்டேன். எனது வருங்காலத்தைப் பற்றி நான் இன்னும் தீர்மானிக்கவில்லை என்று கூறினார்.

நீங்கள் செய்த செய்கைக்குப்பின் கட்சி உங்களைவெளியேற்ற வேண்டிய நிர்ப்பந்தத்திலிருக்கிறது என்பதை நீங்களே ஒப்புக்கொள்வீர்கள் என்று நான் கூறினேன்.

வெளியேற்றத் தீர்மானித்து விட்டோமென்றோ எந்த முகத்தோடு பிரதமரைப்பார்ப்பது என்றோ நான் எக்கட்டத்திலும் கூறவில்லை. திரு. நவரத்தினத்தின் மனச்சான்றே இந்த உண்மையை அவருக்குக் கூறும்.

நான் எடுத்த முடிவைக் கட்சி கண் மூடித்தனமாக ஏகோபித்து ஒருவர் கூட ஆட்சேபியாமல் ஏற்றுக் கொண்டது என்று கூறுவது கட்சியின் பொதுக் காரிய சபை உறுப்பினர் அனைவரையும் அவமதிக்கும் கூற்றாகும், இது உண்மையுமல்ல.

குறிப்பிட்ட சட்டத்தையும் நடந்த சம்பவங்களையும் பல மணித்தியாலங்களாக அவசி ஆராய்ந்த பின்னரே பொதுக்காரிய சபை உறுப்பினர் பொறுப்புணர்ச்சியோடு இம்முடிவைஎடுத்தனர்.

இச்சட்ட மூலம் வரும் விளைவுகளென்று திரு. நவரத்தினம் கூறுபவை வெறும் பிரமையேயாகும். தமிழினத்தைப் பாதுகாக்கும் அக்கறை திரு. நவரத்தினத்தின் தனியுடமையல்ல, கட்சியைத் தூற்றுவதை விட்டு ஆக்கபூர்வமாகத் தனது துறையில் செய்யக் கூடிய பணியைச் செய்யுமாறுதிரு. நவரத்தினத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

## நவரத்தினத்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பாட்டிற்கு முரண் பட்டு பேசிவிட்டு வாக்களிக்காது ஒதுங்கிக்கொண்டார்.

இப்பொழுது அடையாள அட்டை மசோதா பிரச்சினையில் 3-வது தடவையாக கட்சிக் கட்டுப்பாட்டை மீறி அரசாங்கத்துக்கு எதிராக வாக்களிக்கப்போவதாக அறிவித்துள்ளார்.


முதல் இரு தடவைகள் திரு. நவரத்தினத்துக்கு மன்னிப்பளித்த தமிழரசுப் பொதுச் சபை இம்முறை கண்டிப்புடன் நடந்து கொண்டிருக்கிறது.

தமிழரசுப் பொதுச் சபை இப்படித் தயவுதாட்சண்யமின்றி ஒழுங்கு நடவடிக்கையெடுத்து திரு. நவரத்தினத்தை வெளியேற்றியிருக்காவிட்டால், கட்சிக் கட்டுப்பாடு கலகலத்துவிடுவதுடன் அரசியல் எதிரிகளுக்கு தமிழரசுக் கட்சி ஓர் கேலிப் பொருளாகவும் மாறிவிடும்; அரசாங்கத்தில் தமிழரசுக் கட்சிக்கிருக்கும் கண்ணியமும் மறைந்துவிடும்.

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

காங்கிரசை மசோதாவுக்கு எதிராக தூண்டிவிடக் கூடிய விதத்திலும் செய்திகளை வெளியிட்டு படாத பாடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

எப்படியிருந்த போதிலும், இம்மாத இறுதிக்குள் மாவட்ட சபை மசோதா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவது உறுதியென அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பாட்டாளி முதல் பணக்காரன் வரை

எல்லோரும் புகைப்பது

கமலா பீடி

ஒரு முறை வாங்கி உபயோகித்தால அதன் உண்மை விளங்கும்

கமலா ஸ்டோர்ஸ்,

இல. 15, செட்டியார் தெரு, கொழும்பு-11

தொலைபேசி 3597—6522

தந்தி: கமலா


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வட்டுக் கோட்டைச் சிங்கத்தின் கர்ஜனையில் அகலவத்தையாரின் வாதம் அடிபட்டது!

ஏப்ரல் 23, 24 ஆகிய இரு தினங்களிலும் நடைபெறற சனப்பிரதிநிதிகள் சபைக் கூட்ட நிகழ்ச்சிகள் மிகவும் சுவையுடனும், சுறுசுறுப்புடனும், நடைபெற்றன. இந்த இரு நாட்களிலும், பிரச்சினைக்குரிய ஆட்கள் பதிவு மசோதா சமர்ப்பிக்கப்பட்டு அதன் மேலான விவாதம் சூடு பிடிக்க நடைபெற்றது.

ஆட்கள் பதிவு அடையாள அட்டைகள் மசோதாவை சபையில் பிரதமரே சமர்ப்பித்து தமது உரையை நிகழ்த்தினர். பிரதமரது உரை தெளிவாகவும், உறுதியாகவும் இருந்தது.



ஆட்கள் பதிவு மசோதாவின் ஒரே நோக்கம், கள்ளத்தனமாக இந்நாட்டுக்கு வருவோரை கட்டுப்படுத்தலும், கள்ளத்தனமாக இங்கு வசிப்போரை கண்டு பிடிப்பதுமே என்பதை பிரதமர் தெளிவாக எடுத்துக் கூறினர். பிரஜாவுரிமை பிரச்சினைக்கும், அடையாள அட்டை பிரச்சினைக்கும் சம்பந்தமே கிடையாது என்பதையும் எடுத்துரைத்தார் பிரதமர்.

மசோதாவில் பிரச்சினைக்குரிய விதிகளில் திருத்தங்கள் மாற்றங்கள் கொண்டு வருவதற்கு உறுப்பினர்களுக்கு வசதியளிக்கப்படும்.

மசோதா கமிட்டி நிலையம் ஆராயப்படும் போது திருத்தங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் பிரதமர் உறுதியளித்தார்.

### எதிர்க் கட்சியின் மகிழ்ச்சி

திரு. நவரத்தினம் மசோதாவை எதிர்த்தும், அரசாங்கத்தைத் தாக்கியும் பேசத் தொடங்கியதும், எதிர்க் கட்சியினர் குதூகலித்து, அதை வரவேற்கத் தொடங்கினர். தமிழரசுக் கட்சிக்கும் அரசாங்கத்துக்கு மிடையேயுள்ள உறவு முறிந்து, அதனுல் அரசாங்கம் கவிழ்ந்து தேர்தல் நடந்து, அதன் மூலம் தங்கள் ஆட்சி ஏற்பட்டு, அதன் பின்னர் தமிழ் பேசும் மக்களை நிர்மூலமாக்க திட்டமிட்டிருக்கும் எதிர்க்கட்சியினருக்கு நவரத்தினத்தின் திடீர் மாற்றம் மகிழ்ச்சியைக் கொடுத்ததில் ஏது ஆச்சரியம்?

திரு. நவரத்தினத்தின் பேச்சில் மசோதாவுக்கு எதிரான யதார்த்த ரீதியிலான கருத்துக்கள் காணப்படவில்லை. மசோதாவினுல் எதிர்காலத் தமிழ் பேசும் மக்கள் பாதிக்கப்படக் கூடும் என்ற ஒருவகை கற்பனையில் சிந்தித்துக்கொண்டே பேசித் தள்ளினர் திரு. நவரத்தினம்.

## மணிவாசகரும் உமர்கயாமும் பாராளுமன்றத்துக்கு வந்தனர்!

### கற்பனைப் பயம்

ஊர்காவற்றுறை எம். பி. அரசியலில் ஒரு தலைப் பட்சமாகவே சிந்திக்கும் ஆற்றல் படைத்தவர். அவரது அடி மனதில் ஆணிவேராகப் பதிந்து விட்ட ஓர் உறுதியான கருத்து—ஐ. தே. கட்சி எப்பொழுதுமே தமிழருக்கு எதிரான கட்சியென்பதாகும். இதை அவருடன் நெருங்கிப் பழகியவர்களிடம் அவர் பல முறை வாய்விட்டு சொல்லியிருக்கிருர்.

இதே அச்சத்துடன் தான்-அதாவது சுயமாக தமது கற்பனையில் ஒரு சிந்தனையை ஏற்றுக் கொண்டு மசோதாவை எதிர்த்து பேசினர்.

தமது இச் செய்கை மூலம் கட்டுப்பாடான இயக்கமா



போட்டிருக்க மாட்டாரென்று கூறலாம்.

கொல்வின் பேசிக்கொண்டிருக்கும்போதே அவருக்கும் வட்டுக்கோட்டைச் சிங்கம் 'அமிரு'க்குமிடையில்வாக்குவாதம் ஏற்பட்டுவிட்டது. தமிழரசுக் கட்சியைப் பற்றி நினைத்தபடியெல்லாம் பேசுவதற்கு தளபதி விடுவாரா?

சேனநாயகாவுக்கு விற்றுவிட்டதாகத் திரு. கொல்வின் கூறியபோது அரசியல் என்பது ஓர் சூதுவிளையாட்டு என்று கூறுவது ஞாபகத்துக்கு வந்தது.

சிங்களவர்களின் உரிமைகளைத் தமிழர்களுக்குப் பிரதமர் விற்றுவிட்டதாக இதற்கு முன்னர் பாராளுமன்றத்திலும், பாராளுமன்றத்துக்கு வெளியேயும், எதிர்க் கட்சியினர் குய்யோ முறையோ என்று ஒப்பாரி வைத்தது - ஒப்பாரிவைத்து வருவது இன்னும் காதுகளை விட்டு நீங்காத நிலையில், 'றெக்கோட்டை' கொல்வின் மாற்றிப் போடுகிருர் என்ருல், அரசியல் வாதிகள் பொய்யர்கள் என்று சொல்லலாமா? ஆனுல் அப்படிப் பொதும்பலாகச் சொல்வதும் தவறு என்பதற்கு அடையாளமாகத் தமிழரசுத் தந்தை செல்வா இருக்கிருரே!

தமிழரசுக்கட்சி அழிந்தொழிந்தால் தான், தமிழர்களின் வாழ்வு சிறக்கும் என்ருர் டாக்டர் கொல்வின். எனவே தமிழரசுக் கட்சியின் முதுகில் குத்திய ஊர்காவற்துறை எம். பியை அவர் தட்டிக் கொடுத்ததில் வியப்பென்ன?

### 'அமிரின்' ஆவேசம்

தமிழரசுக் கட்சிக்கு காரசாரமாகக் 'கொடுத்து'

ரொலித்தன. அவர் பேசும் போது அடிக்கடி அரசாங்கத் தரப்பிலிருந்து எழுந்த கையொலிகளைத் தவிர வேறு சத்தமேயில்லை.

தமிழரசுக் கட்சி மீது கொல்வின் தொடுத்த பாணங்களைப் பொடிப்பொடியாக்கினர் தமது கருத்தாழம் மிகுந்த வாதத் திறமையினுல்.

ஆரம்பத்தில் ஆங்கிலத்திலும் பின்னர், தமிழிலும் உரையாற்றினர் அமிர். அவரது ஆங்கிலப் பேச்சாற்றலையும், எதிர்க் கட்சியினர் மேல் அவர் விட்டெறிந்த சொல்லம்புகளையும்பாராளுமன்றம் பலமுறை கண்டிருக்



கிறதென்ருலும், இம்முறை அது தனிக்கவர்ச்சியுடையதாயிருந்தது.

திரு. அமிர்தலிங்கத்தின் பேச்சில், திருவாசகம் வந்தது. மணிவாசகர் வந்தார். உமர்கய்யாமும் கூட வந்தார்.

தமிழரசுக்கட்சி மீது கொல்வின் வீசிய கண்டனங்களுக்குப் பதில் அளித்த அதே நேரத்தில் வழக்கறிஞர் கொல்வின் ஆர். டி. சில்வாவையும் அவரது நுட்பமான 'தொழில்' அறிவையும் பாராட்ட 'அமிர்' தயங்கவில்லை.

### பாராளுமன்றத்தில்...

கிய தமிழரசுக் கட்சிக்கும் தந்தை செல்வாவிற்கும், ஏன் அரசாங்கத்துக்குமே ஒரு 'கறையை' திரு. நவரத்தினம் ஏற்படுத்தி விட்டாரென்று சில எதிர்கட்சி எம் பீக்கள் கூட தெரிவித்தனர்.

### கொல்வின் தளபதி மோதல்

வெறும் வாயை மெல்பவனுக்கு பிடி அவல் கிடைத்தால் போதாதா?

லங்கா சம சமாஜக் கட்சியின் துணைத் தலைவர் டாக்டர். கொல்வின் ஆர். டி. சில்வா அடுத்ததாகப் பேசினுர்-அல்ல அல்ல-தமிழரசுக் கட்சியினரை ஏசினுர். திரு. நவரத்தினம் ஏற்படுத்தி கொடுத்த வாய்ப்பு கொல்வினுக்கு உஷாரை ஏற்படுத்தி விட்டது. ஆனுல் தமக்குப் பின்னுல் பேசப் போவது யாரென்பது கொல்வினுக்கு முன் கூட்டியே தெரிந்திருந்தால், தமிழரசுக் கட்சிமீதே வாயைப்


ஒரு கட்டத்தில் சிங்களத்தை அரசாங்கமொழியாக நீங்கள் ஏற்றுக் கொண்டீர்கள் தானே என்று கொல்வின் கேலி பேசியபோது, 'இல்லை, தமிழரசுக் கட்சி ஒருபோதும் நாட்டின் ஒரே உத்தியோக மொழியாக சிங்களத்தை ஏற்றுக்கொள்ளவில்லை' என்று உரத்த

### போகாதிருபர்

குரலெடுத்து பாராளுமன்றம் அதிரும்படி கர்ஜித்தது வட்டுக்கோட்டைச் சிங்கம். பராளுமன்றத்திலும் சரி, தமிழரசுக் கட்சியிலும் சரி, கோப்பாய்ச் சிங்கத்தின் இடத்தை இன்று நிரப்பி வருவது வட்டுக்கோட்டைச் சிங்கம்தானே!

தமிழர்களின் உரிமைகளை திரு. செல்வநாயகம், டட்லி

விட்ட திருப்தியுடன் மகிழ்ச்சிபொங்க அமர்ந்தடாக்டருக்குஅந்த மகிழ்ச்சி நீடிக்க முடியவில்லை. அவரது 'இரட்டை நாக்கு' பேச்சு வட்டுக்கோட்டைச் சிங்கத்தைத் துள்ளி எழச் செய்தது. தமிழரசுத் தளபதி அமிர் எழுந்தார். அவரது வார்த்தைகள் ஒவ்வொன்றும் கணீரென்று பாராளுமன்றக் கட்டடத்துள் எதி



திரு. இ. அப்பாத்துரை எழுதிய 'சங்கானைப் படலம்' நூல் வெளியீட்டு விழா புதுவருடத்தன்று சங்கானையில் நடைபெற்றது. நூலை வெளியிட்டு வைத்து வட்டுக்கோட்டை பா. உ. திரு. அமிர்தலிங்கம் உரை நிகழ்த்திக் கொண்டிருக்கிருர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பாலமுரளி

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

பால முரளியின் பொம்மையொன்றை வைத்திருக்கிருன்? அதனைத் தூக்கிக் கொஞ்சி விளையாடுவான். அதனேடு இரகசியம் பேசுவான். அந்தப் பொம்மை அவ்வளவு அழகானது. அவன் போய் விட்டான். எங்களை நித்திய துயரத்தில் அமுக்கிவிட்டு, போகவேண்டிய இடத்துக்குப் போய் விட்டான்.

தெய்வத்துக்குச் சாவும் உண்டா? எங்கள் வீட்டுத் தெய்வம் செத்து விட்டதே! பூவுதிரப் பிஞ்சுதிர என்பது போல் அந்தச் சின்னப் பிஞ்சு உதிர்ந்து மடிந்து விட்டானே!

அவன் நினைவிலிருந்து மீளுகிறேன். அந்த நினைவுகள் கற்பூரமாய் மணக்கிறது. ஐயோ எங்கள் 'பாலமுரளி' செத்துவிட்டானு? நினைக்கவே முடியவில்லையே! இந்தக் கொடுமையை எப்படித் தான் தாங்க முடியும். அதோ! திண்ணையில் நின்று குறும்பு செய்து கூத்தாடுவது யார்? 'பால முரளி' தானே! ஐயோ! அவன் தான்! அவன் தான்! 'மாதாவை ஒரு நாளும் மறக்க வேண்டாம்' என்றுபாடுவது யார்? அவன் தானே! ஆமாம் - அவனே தான்! அவன் எங்கே? அவன் எங்கே?...வீடு சூனியமாய்க் கிடக்கிறது. அம்மா அழுகிருள். அம்மா அழுவது காதில் விழுந்து கொண்டேயிருக்கிறது.

(யாவும் கற்பனை)

# நடிகர்களின் பெயரால் மன்றங்கள் வேண்டாம் கலையின் பெயரால் சங்கங்கள் அமைப்போம்!

## இன்றைய சினிமா விசிறிகளின் மனப்போக்கில் மாற்றம் வேண்டும்!

### சுயநலமற்ற நடிகர்கள் யாரும் கிடையாது விசிறிகளின் பித்தம் தெளியட்டும்

**திரையுலக நட்சத்திரங்களின் பெயரால் மன்றங்களை அமைப்பதும், நடிகர்களின் பெயரால் கோஷ்டி சேர்ந்து கொண்டு சண்டையிடுவதும், தமிழ் திரையுலக ரசிகர்களிடையே வேகமாக பரவி வருகிறது.**

**இது ஆபத்தானதென்றும், கலையின் பெயரால் பொதுவாக ரசிக மன்றங்கள் அமைப்பதே தவிர நடிகர்களின் பெயரால் மன்றங்கள் அமைப்பது பயித்தியக்காரத்தனம் என்கிருர் இக் கட்டுரை ஆசிரியர், தேவாதி தேவன்.**

**கட்டுரை ஆசிரியரின் இக்கருத்தை தாக்கியோ, தாங்கியோ எழுத விருப்பமுள்ளவர்கள் எழுதலாம். கட்டுரையில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் சுதந்திரனின் கருத்துக்கள் ஆகமாட்டா.**

**ஆசிரியர்,**
**கலைப்பூஞ்சோலை.**

### "தேவாதி தேவன்"

இன்றைய சமுதாயத்தில் சினிமா வெள்ளிகளின் விசிறிகள், பக்கம் சாரும் நிலைமையைப் பார்த்துக் கவலைப்படாதிருக்க முடியவில்லை. ஒரு காலத்தில், நடிகைகளின் விசிறிகள் சிலருக்கு, மன நோய் பிடித்தமை நாடறிந்த உண்மை.

அப்போதெல்லா சில விசிறிகள் சிந்தாமணிப் பைத்தியம் பிடித்து, இந்தியா நோக்கிக் கம்பி நீட்டினார்கள். சிலர் மன நோய் ஆசுபத்திரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

அது அன்று, ஆனல் இன்றே! ஒரு வெள்ளியின் விசிறிகள் ஒரு பக்கமும், இன்னெரு வெள்ளியின் விசிறிகள் ஒரு பக்கமும், இன்னெரு வெள்ளியின் விசிறிகள் மறு பக்கமுமாக, நின்று, தெருவிலே சண்டையிடுவதைப் பார்த்தால், பரிதாபமாயிருக்கிறது. விசிறிகளின் கோஷ்டி வளர்ச்சி பல்கிப் பெருகி வருவதால், வெள்ளிகளை அரசியலில் இழுத்துப் போட்டு, வேடிக்கை பார்க்கின்றனர் அரசியல் வாதிகள். கலைஞர்கள் அரசியலில் பங்கு பற்றுவதால் கலையும் பாதிக்கப்படுகிறது.

ஒருவர் சிறப்பாக நடிக்கிருல் என்ற காரணத்தால், அவரை விரும்பும் விசிறிகள் அவரை அரசியலிலும் பின் பற்ற வேண்டுமென எதிர் பார்க்க முடியாது தான். இருப்பினும் உணர்ச்சி வசப்பட்ட விசிறிகள் சிலர் காற்றடித்த பக்கம் இழுபட்டு விடுவதுமுண்டு.

இன்று பல பெரிய வெள்ளிகள் வாயை மட்டும் அசைத்துப் புகழடைந்து விடுகின்றனர். இரவல் குரல் கொடுப்போர் இலை மறை காய்கள் போல் இருக்கின்றனர். சில நாட்களுக்கு முன், ஒரு கிராமத்தில் நடந்த விழாவின் போது ஒலிபெருக்கி அலறியது. அப்போது ஒருவர் ஓடிவந்து "சிவாஜி வாய் அசைத்த பாட்டு வேண்டாம், எம். ஜி. ஆர். வாய் அசைத்த பாட்டே வேண்டும்" என்று அடம் பிடித்தாராம். இப்படியான ரசிகர்களும் உண்டு.

நல்ல கருத்துக்களடங்கிய வசனங்களை இயற்றிய வசன கர்த்தாக்களுக்கும் நல்ல பாடல்களை இயற்றிய கவிஞர்களுக்கும் கிடைக்க வேண்டிய பாராட்டுகளை, சில வெள்ளிகள் தட்டிக் கொண்டு போய்விடுகின்றனர்.

வசனகர்த்தாவின் கருத்து நடிகரின் சொந்தக் கருத்தாகமாறி, விசிறிகளின் வாய்களில் அடிபடுகிறது. பாடல்களும் அப்படியே! இவற்றியவரும், பாடியவரும் இருக்க பாராட்டுகளை வாயசைத்தவர் பெற்றுக் கொள்வார்.

நடிப்புத்திறனை ரசிக்கும் ரசிகர் கூட்டம், கதாநாயகர்களாக நடிக்கும் வெள்ளிகளுக்கே, தங்கள் முழு ஆதரவையும் காட்டுவது எவ்வளவு மதியீனமோ, அதைவிட மதியீனம், நடிப்பவர்களின் நடிப்புத் திறனை ரசியாமல், அவர்களை வெறுப்பது! வில்லர்களாக நடித்துத் தமது திறமையைக் காட்ட முன் வருவார்களா?

சதா கதாநாயகர்களாக நடித்து வரும் வெள்ளிகள் ஒரு சில படத்திலாவது அடி உதை வாங்கும் வில்லர்களாக நடித்துத் தமது திறமையைக் காட்ட முன் வருவார்களா?

பெரிய வெள்ளிகள் சில, தாம் கதாநாயகர்களாக தோன்றி இரட்டை வேடந் தாங்க விரும்புகிருர்களே தவிர, ஒரு படத்திலாவது வில்லர்களாக மாத்திரம் நடித்து 'சுயநலமற்ற நடிகர்' என்பதை நிரூபிக்கவில்லை.

இந்நிலையில் சுயநலமற்ற நடிகர் என்று எந்த நடிகருக்கும் பட்டம் சூட்டிவிட முடியாது.

குறிப்பிட்ட நடிகை நடித்தால், நடிக்கமாட்டேன்' என்பன போன்ற வெள்ளிகளின் ஆதிக்கத்தையும் படவுலகில் இருந்து விரட்ட ரசிகர்கள் முன்வர வேண்டும். அதுவரை வெள்ளிகளின் பெயரால் மன்றங்கள் அமைப்பதைத் தவிர்த்து, பொதுவாகக் கலா ரசிகர் மன்றம் என்ற பெயரில் தோற்றுவித்து பாரபட்சம் காட்டாது வெள்ளிகளுக்கும் பாராட்டுதல்களைத் தெரிவிக்கலாம்.

---

# பாலமுரளி

எமது சிறுகதை

## ஆரையம்பதி ஆ. தங்கராசா

அவன் போய்விட்டான். நிரந்தரத் துயர மழையைக் கொடுத்து விட்டுப் போய் விட்டான்.

அவனுக்கு இன்னும் ஐந்து வயதுகூட முடியவில்லை. அவன் தான் எவ்வளவு ஞானம் பெற்ற குழந்தையாக இருந்தான். அவன் கதைப்பது, அவன் படிப்பது, அவன்நடிப்பது, அவன் நடப்பது, ஏன் அவன் பழகுவது கூட எவ்வளவு கூர்மையானவை; எத்தனை பெரிய மனுஷத்தனம் படைத்தவை. நான் பலவேளை அவனது குழந்தைத் தனக் குறும்புகளைக் கண்டு அவைகளில் எவ்வளவோ 'உள்ளடப்பமான' சங்கதிகள் இரை போட்டுக் கிடப்பதைக் கண்டு, அவனது சாதுரியத்தை மனத்தால் துதித்து அஞ்சலி செய்வதுண்டு.

அவன் போய்விட்டான். பசுமை நிறைந்த நினைவுகளைச் சுட்டெரித்து, உள்ள வெளியை அக்கினிச் சுடரில் நிறைத்து......அவன் போய் விட்டான். அவனைப் பெற்றவள் கதறிக் கதறிச் சோறு தண்ணி இல்லாமல் துரும்பு போல் இளைத்துக் கிடக்கிருள். அவன் சிரிப்பில் நிறைவு கண்ட அந்த வீடு வெறும் சூனிய மயக்கில் சிக்கி அழுது மாய்கிற அவலத்தைத் தினமும் கண்டு... அதன்சமாதிக்குள் கல்லறையாகி......அந்த வீடு சுடலையாகக் கிடக்கிறது.

அவன் செத்து விட்டான் என்று சொன்னல் எவர் தான் நம்பப் போகிருர்கள். கோயிலில் உறைந்து கிடக்கும் பால முருகனுக்கும் அழிவு உண்டோ? ஆயபாடியில் வெண்ணெய் திருடி உண்டு, குறும்புகள் பல செய்யும் பால கண்ணனுக்குச் சாவும் வருமா? அவன் செத்தது, அந்தக் குழந்தை செத்தது வெறும் பொய் தான்.

பொய் இல்லாமல் வேறென்ன? காலையில் எழுந்து குளித்துவிட்டுத் தேவாரம் பாடி முருகனைத் துதித்து விட்டு, அம்மா கொடுத்த உணவை ஆசையோடுஉண்டு மகிழ்ந்து விட்டு, புத்தகப் பையைத் தோளில் தொங்கப் போட்டுக் கொண்டு பள்ளிக் கூடம் போனவன், வீட்டுக்கு வந்து பூ மாய்ஞ்சது போல் மாய்ஞ்சால் யார் தான் அவன் சாவை உண்மை என்று நம்பப் போகிருர்கள்.

அரைத்த சந்தனம் போல் அவனது நினைவுகள் என்றும் மணத்துக் கொண்டே இருக்கும். 'பெருங்காயம் வைத்த பாத்திரம்' போல் அவனது குறும்புக் கூத்துகள் என் மன வீட்டில் துயில் பூண்டு, அழிவில்லாத அமுத நினைவுகளை 'லக்ச பானு' நீர் வீழ்ச்சியாய் சொரிந்து கொண்டே இருக்கின்றன. 'சோ' வெனக் கொட்டும் நீர்த்தெறிப்புக்குள் சங்கமித்துக் கிடக்கும் மின்பொறியைப்போல் என் உணர்வில், உணர்வை மிஞ்சிய ஆன்மீக வீக்கத்தில் அவன் கலந்து பூவும் மணமுமாய், பாலும் நெய்யுமாய் தேங்காய்ப் பூவும் எண்ணெயுமாய் அவன் வாழுகிருன். அந்த வாழ்க்கையால் நான் அவனுகி...அவனது நினைவுக் காற்றைச் சுவாசித்து அதில் ஒரு முழுக் கதையைப் படைக்கத் துடிக்கிறேன்.

அவன் பள்ளிக்கூடம்விட்டு வந்து விட்டான். அம்மாவிடம் அன்றுபடித்த பாடங்களை எல்லாம் ஒன்றும் விடாமல் ஒப்புவிக்கிருன். 'சின்னச் சின்ன நாய்க் குட்டி சிவந்த நல்ல நாய்க் குட்டி, சீமையில் பிறந்த குட்டி, வெண்ணிற மயிர்க் குட்டி, குட்டி' என்று 'டீச்சர் அம்மா' படித்துக் காட்டிய பாடலை ஆசையோடு எவ்வளவு அழகாகத் தான் அம்மாவுக்குப் படித்துக் காட்டுகிருன். அம்மா பெருமையால் பூரித்துப் போகிருள்.

அடுத்த நாள் இன்னுமொரு அதிசயம் நடந்தது. திருக்குறளில் இரண்டுகுறள்களை ஒப்புவித்து அம்மாவை மட்டுமல்ல எங்களையும் ஆச்சரியத்தில் ஆழ்த்துகிருன். இப்படி ஒவ்வொரு நாளும் அவனது அறிவு போதி மரமாய் பொலிய......'வளரும் பயிரை முளையில் தெரியும்' என்பதற்கு அந்தக்குழந்தை ஒரு எடுத்துக் காட்டாய்த் திகழ்ந்தது...

ஊரில் நடக்கும் கூத்துக்கள் ஒவ்வொன்றையும் அம்மாவோடு போய் இரவு இரவாய் கண் விழித்துப் பார்த்து விட்டுத்தான் வருவான். அடுத்த நாள் அந்தக் கூத்து வீட்டில் அப்படியே ஒழுங்கு பிசகாமல் நடைபெறும். நான் திண்ணைக் கட்டிலில் இருந்து கொண்டு புத்தகம் படித்துக் கொண்டிருக்கிறேன். திண்ணையில் வள்ளிஅம்மன் நாடகம் நடந்து கொண்டிருக்கிறது. அவனைச் சுற்றி வர ஒரு சிறு கூட்டம். பக்கத்து வீட்டுக் கிழவி மாரெல்லாம் கூடிவிட்டார்கள். அவன் பாடுகிருன். கந்தனை மணந்து கொண்ட குறவள்ளியே பாடுவது போல் இருக்கிறது 'இந்தாருங்க தேன் தினைமா, உண்ணத் தாறேன் சுவாமி நாதா' அவன் பாடுகிருன். கூத்துத் தொடர்கிறது. கூட்டத்தின் எக்காளம் பொங்கி வழிகிறது, அந்தப் பிஞ்சுக் காலால் அவன் தான் என்ன மாதிரி ஆடுகிருன். அவன் வெறும் குழந்தைதானு? தெய்வாம்சம் பொருந்திய குழந்தைச் செல்வமா? பண்டாரமாய் ஆடும்போது, கிழவனுகப் பாவனை பண்ணி எத்தனை உயிர்த்துடிப்போடு குறும்புகள் பல செய்து ஆடுகிருன்.

அம்மா செல்லமாகப்பேசி விட்டு 'கண்பட்டு விடும் இந்தப் பொடியனுக்கு' என்று கூறிக் கொண்டு இரும்பு காய்ச்கிப் போடுகிருள்.


படம் பார்த்து விட்டு வந்தால் படத்தில் பேசுவது போல் பேசிக் காட்டுவான். பாடலை அப்படியே பாடிக் காட்டுவான். சிவாஜி கணேசன் போல் பேசி நடித்துக்காட்டி எத்தனை ஆனந்த சாகரத்தில் நீந்த வைப்பான். அவன் பெரியவன்; எல்லாம் தெரிந்த முழு மனிதன்.

எந்த விஷயத்தையும் துருவித் துருவிக் கேட்பான். சந்தேகம் வந்தால் அதை உடனே கேட்டு அறிந்து கொள்வான். அதற்குப் பிறகுதான் அவன் நிம்மதியாக உலாவுவான். பலரும் அவனது செய்கைகளைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். இவன் ஒரு குட்டி விஞ்ஞானிபோல் அந்த வீட்டில் வலம் வந்தான். ஆனல் அவன்பறந்துவிட்டானே!...

அம்மாவுக்குத் தொந்தரவு கொடுக்க மாட்டான். பள்ளிக்குப் போகும் பொழுது அம்மாவைக் கும்பிட்டு விட்டுத்தான் போவான். வீட்டில் குறும்புகள் செய்தாலும் பள்ளிக் கூடத்தில் மிகவும்ஒழுங்காக நடந்து கொள்ளுவானும். 'டீச்சர் அம்மா' அவனைப் பற்றி நெடுகிலும் நிறையப் புழுகித் தள்ளுவாள். அவன் ஓர் விந்தைப் பிறவி, வேறென்ன தான் சொல்ல முடியும். அவன் குறும்பு கூட படிப்பு அல்லது நடிப்பு சம்பந்தப்பட்டதாகத் தான் இருக்கும். அவன்அழுவதை நான் கண்டதே கிடையாது. பசித்தால் மட்டும் அம்மாவிடம் சோறு கேட்பான். ஆசையாக அம்மா கொடுத்தால் மட்டுந்தான் வாங்கிச் சாப்பிடுவான். வெள்ளிக்கிழமைகளில் கோயிலுக்கு அம்மாவோடு போய் வருவான், மூன்று பூச்சாகத் திருநீறு பூசி ஆண்டார்போல் நெற்றிக்குச் சந்தனப் பொட்டு வைத்து, முழுப் பக்தனுகக் காதுக்கும் பூவைத்து வீட்டுக்கு வருவான், தேவாரங்களை அவன் பாடும்போது வீணையின் நாதம்போல் எவ்வளவு இனிமையாக இருக்கும்.

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



மே-9ந் திகதி முதல்!

செல்லமகால் (கொழும்பு) ஈறொஸ் (பாமன்கடை) வின்சர் (யாழ்ப்பாணம்) நெல்சன் (திருமலை)

மற்றும் திரைகளில்

# மகராசி

மே-10ந் திகதி முதல்!

கெயிட்டி (கொழும்பு)

எம். ஜி. ஆர், பத்மினி, பானுமதி, கிருஷ்ணன், மதுரம் நடித்த

# மதுரை வீரன்



4-வது ஜனரஞ்சக வாரம்!

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) விஜயா (மட்டுநகர்) சிறிகிருஷ்ணு (திருமலை)

# பெற்றால் தான் பிள்ளையா?


விரைவில் சினிமாஸ் திரைகளில் எதிர்பாருங்கள்!

ஜெய்சங்கர், விஜயலட்சுமி நடித்த

மாடர்ன் தியேட்டர்ஸ்

# வல்லவன் ஒருவன்

9-வது வாரம்! வெலிங்டன் (யாழ்ப்பாணம்) சரஸ்வதி சபதம்



மகத்தான இரண்டாவது மாதம்!

கத்தி வீச்சிலே உலகை வென்ற காளை! கண் வீச்சிலே அவனை வென்ற கட்டழகி!! நகைச்சுவை!!! யாவும் நிறைந்தது!

சென்ட்ரல் (மருதானை) லவீனியா (நுகேகொடை) ராணி (யாழ்நகர்) ஈஸ்வரன் (கிளிநொச்சி)

★ எம். ஜி. ஆர், ★ கே. ஆர். விஜயா ★ விஜயகுமாரி, ★ நாகேஷ் ★ மனோரமா ★ எம். என். நம்பியார், ★ எஸ். ஏ. அசோகன் ★ வி. கே. ராமசாமி நடித்த

டைரக்ஷன் எம். ஏ. திருமுகம்

# விவசாயி

வெகு விரைவில் எதிர்பாருங்கள்!

சிலோன் என்டடெயின்மென்ட்ஸ் தாபனத்தார் அளிக்கும் ஜேம்ஸ்பொண்ட் நவீனம்!

புதுமையான கதை விறுவிறுப்பான காட்சிகள்!

★ ஜெய்சங்கர், ★ ராதிகா ★ பாரதி ★ சோ மற்றும் பலர் நடிக்கும்

# நான் யார் தெரியுமா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194, ஏ, இலக்கத்தில் 1968-ம் வருடம் மே மாதம் 4-ந்திகதி சனிக்கிழமை அச்சிட்டுப்பிரசுரிக்கப்பட்டது.